After O/L
ENGLISH COURSES
Duration 6 Months
Basic English Programme
Cambridge (U.K) Certificate
(International Certificate)



அறைவு 02 இயம் 10 October 12 - 18, 2013

மலைமுரசு
MALAIMURASU
உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்
வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

# நிலைக்குமா கிழக்கில் ஆட்சி?

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

15

### கோணேசர் மலையில் தற்கொலை முயற்சி

நுவரெலியாவிலிருந்து வருகை தந்திருந்த இளம் யுவதி ஒருவர் கோணேசர் மலையில் ஏறிக் கடலுக்குள் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளத் 15

### வருமான ஆசையால் 20 வயது இளைஞன் பலி

திருக்கடலூரில் இருந்து கடலுக்குப் புறப்பட்டுச் சென்ற 20 வயதான இளைஞன் ஒருவன் கதிரவெளி கடற்பரப்பில் பலியாகியுள்ளார். கடந்த 06ம் திகதி அந்தி சாயும் வேளையில் ...... 15

### பிரபல கள்வன் திருமலையில் கைது

பல களவு நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கள்வன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். முன்னாள் போராளியான ... 15

### அக்கரைப்பற்றில் விசா இன்றி நைஜீரியன்

அக்கரைப்பற்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய கறுப்பின இளைஞன் ஒருவனைக் கைது செய்த காவல்துறையினர் அதிர்ச்சியடைந்து உள்ளனர். ... 15

### கனேடியக் கப்பலின் சூத்திரதாரிகளுள் ஒருவர் விபத்தில் மரணம்???



கனடா நாட்டினைச் சென்றடைந்து பெரும் சர்ச்சைகளை உருவாக்கிய எம்.வி.சன்சீ கப்பலின் சூத்திரதாரிகளுள் ஒருவர் எனச் சந்தேகிக்கப்படும் சத்தியபவன் ஆசீர்வாதம் மானிப்பாய் நகரில் நடந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. செம்டெம்பர் 6ம் திகதி இவர் மரணித்திருந்தாலும் தற்போதுதான் இச் செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூன்று வருடத்திற்கு முன்பு 492 பயணிகளுடன் இக் கப்பல் கனடாவைச் சென்றடைந்திருந்தது.

கனடாவில் ஆசீர்வாதத்திற்காக நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்த வழக்கறிஞரான கப்றியல் சாண்ட் கருத்தறிவிக்கையில் "சிலவாரங்களுக்கு முன் ஆசீர்வாதம் கொல்லப்பட்டது உண்மையே. ஆனால் என்ன நடந்தது எனத் தெரியவில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் கடத்தல் நடவடிக்கையில் குற்றஞ் 15

### கொழும்பில் கடத்தப்பட்டு திருமலையில் காவலிடப்பட்ட மாணவர்கள் எங்கே?

தெகிவளை கடற்படைச் சோதனைச் சாவடியில் வைத்து செம்டெம்பர் மாதம் 2008 ம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமற் போயுள்ள ஐந்து மாணவர்களும் திருமலைக் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக அம் மாணவர்களின் தாயொருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்...... 15

- புதையல் கொள்ளையில் சிதையும் கோயில்கள்-

### பெரியகல்லாறு சித்திவினாயகர் ஆலய பரிபாலன விக்கிரகங்கள் தகர்ப்பு

பெரிய கல்லாற்றில் அமைந்துள்ள பழம்பெரும் சித்தி வினாயகர் ஆலய பரிபாலன விக்கிரகங்களைத் தகர்த்து புதையல் தோண்டிகள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். 15



### கிழக்கின் பிரச்சனைகளுக்கு மாகாண சபையால் விரைவில் தீர்வு !!

15

SS Digital's
Printers for all requirements
அனைத்துவிதமான அச்சு வேலைகளுக்கும் சிறந்த தேர்வு
இப்பொழுது திருமலையிலும்
விரைவான சேவை
தகுந்த விலை
சிறந்த தரம்
2014ம் ஆண்டுக்கான பாடசாலை
• வகுப்பு தரவுப்புத்தகம் • ஆசிரியர் தரவுப்புத்தகம்
• மாணவர் தேர்ச்சி அறிக்கை புத்தகம் (1-13)
என்பன அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்: நீங்களும் பெற்றுகொள்ள


#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி. கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### கிழக்கும் வடக்கும்

வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றவுடன் எப்போதுமே அவ்வமைப்பு கடுமையான விமரிசனங்களையும் கண்டனங்களையும் எதிர்கொள்வது நிகழ்வதாகவே உள்ளது. எனினும் அவ்வமைப்பு தனது பாதையில் பயணித்துக் கொண்டே இருக்கின்றது என்பது அதன் நடவடிக்கைகளிலிருந்து புலனாகின்றது.

அப்பாதை யாருடையது? என்று எப்போதுமே கேள்வியொன்று உண்டு. அப்பாதை எம்முடையது என்று மக்களும், தலைவர் சம்பந்தனுடைய தன்னிச்சையானது என்று சிலரும், மன்மோகன்சிங்கினுடையது என்று சிலரும் எண்ணுவதற்கான வாய்ப்புக்களையும், சந்திகளையும், திருப்பங்களையும் அப்பாதை கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அப்பாதையில் எல்லோருமே பயணித்துக் கொண்டு தான் இருக்கின்றோம்.

மாகாணசபை இயங்கத் தொடங்கும் போதுதான் அம் மாகாண சபை உண்மையில் எவ்வாறான சவால்களை அரசிடம் இருந்தும் அதன் பிரதிநிதிகளான ஆளுனர் மற்றும் அரச அதிகாரிகளிடம் இருந்தும் எதிர்கொள்ளப் போகின்றது என்பதை தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அவ்வாறு தெரிந்து கொள்வது உடனடியாகவே எல்லோருக்கும் தெரியவந்து விடும் என்பதே உண்மை.

இங்கு தான் கிழக்கு மாகாண சபையில் இருந்து வடமாகாண சபை வேறுபடப் போகின்றது.

சுமார் 550 நாட்களை ஐ.ம.சு.முவுடன் கழித்த பின்னர் தான் முஸ்லிம் காங்கிரஸ் தனது கூட்டாளிக் கட்சியின் நடவடிக்கைகள் திருப்பதியாக இல்லை என்பதை வெளியிட்டுள்ளது. அதுவரை ஏன் மு.கா.பொறுத்துக் கொண்டு இருந்தது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஒரு மாவட்ட நிர்வாக அலுவரை மாற்றுவதற்கு இவ்வளவு நாட்கள் தேவைதானோ என்னவோ தெரியவில்லை. ஆனால் இவ்வகை இழுபறிகள் வடக்கில் இருக்காது என்பதுடன் வடமாகாண சபை எதிர்பார்க்கின்ற விடயங்கள் நடைபெறாத போது அதனை மக்களுக்கு உடனடியாகத் தெரியப் படுத்துவதைத் தவிர வேறு எவ்வித மார்க்கங்களும் அம் மாகாண சபைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

கிழக்கில் எவ்வாறு ஆளுங்கட்சியுடன் ஒட்டி உறவாடி வேலைகளிற் சிலவற்றையாவது மு.கா. செய்து முடிக்கின்றதோ அதே அனுகு முறையைத்தான் அரச தலைவர் த.தே.கூ விடமும் எதிர் பார்க்கின்றார் என்பதை முதலமைச்சர் நியமனத்தின் போது அவர் வெளியிட்ட கருத்தான -அரசுடன் ஒத்துப் போனால் அபிவிருத்தி கிடைக்கும்- என்பது சுட்டி நிற்கின்றது.

எது எப்பிடியாயினும் சிறுகச் சிறுக எதையோ, இரு மாகாண சபைக்குட்பட்ட பெரும்பான்மை மக்களும் அங்கு வாழும் சிறுபான்மையிடம் இழப்பது போலத் தெரிகின்றது. புதையல் தோண்டிகளிடம் தப்பியொழிந்திருக்கும் கடவுளா எம்மைக் காப்பாற்றப் போகின்றார்???

## பெரியகுளம் ஆசிரியர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம்.

**உண்மையைப் புலப்படுத்தாத யாருக்கு வைத்தியம் வேண்டும்.**

கடந்த 16.09.2013 ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பெற்றோர்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக 21.09.2013 மலைமுரசு 21 தொடக்கம் 27 வரையான வார இதழில் பெரியகுளம் பாடசாலை தொடர்பாக பத்திரிகையில் வெளியான கருத்துக்கள் எம்மிடையே உள்ளக் குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகையில் 2ம் பக்கத்தில் யாருக்கு வைத்தியம் வேண்டும் என்ற தலைப்பின் கீழ் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறிப்பிடப்படாது பாடசாலை அதிபர், ஆசிரியர்களை சாடும் வகையில் இதழாசிரியரின் கற்பனையில் எழுந்த கருத்துக்கள் வருமாறு....

1.**மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு மிடையிலான உறவு வெறும் சம்பளப் பணத்தில் தங்கியுள்ளதா?** என்ற கூற்று பெற்றோர்களால் கவனயீனமாக ஒழுங்கான முறையில் பாடசாலைக்கு அனுப்பிவைக்க முடியாத பிள்ளைகளை நீராட்டி, சீராட்டி வகுப்பறையில் வைத்து கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களது மனதை எந்தளவு தூரத்திற்கு பாதிக்கும் என்பதை செய்தியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு ஆதாரமாக எம்மால் புகைப்படங்களை சமர்பிக்கமுடியும்.

2. **அதிபர் தனியே நின்றுகொண்டிருக்க ஆசிரியர் மரநிழலில் நின்று வெடிக்கை பார்த்துக்கொண்டிருக்க** என்று பிரசுரிக்கப்பட்ட கூற்று அதிபர், ஆசிரியர்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிர்வாகத்திற்கு எதிராக செயற்பட தூண்டுவதாக இருக்கிறது.

3. **நகரப் பாடசாலை ஆசிரியர்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்** என்ற இதழாசிரியரின் கருத்து கஸ்டப் பிரதேசங்களில் கல்வி புகட்டும் ஆசிரியர்களையும் திறமையுள்ள மாணவனுக்கே நகர்ப்புறப் பாடசாலையில் கற்பிப்பதற்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதற்கு தூண்டுகிறது.

4. **" அன்னயாவிலும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே"** என்ற கூற்று எமது பாடசாலை ஆசிரியர்களுக்கு ஏற்கனவே காதில் ஒலித்தமையாலேயே கஸ்டப்பிரதேச பாடசாலையான இப் பாடசாலையில் கடமைபுரிவதற்கு மனமுவந்து சேவையாற்றுகின்ற ஆசிர்யர்களின் மனதைப் புண்படுத்துகின்ற செய்தியாக இதனை பார்க்கத் தோன்றுகின்றது.

அப்படியில்லையாயின் வெறும் சம்பளத்தை மட்டும் எதிர்பார்த்து வந்து செல்லும் ஆசிரியர்கள் 10 கி.மீ பேரூந்தில் பயணித்தும் 1 கி.மீ கால்நடையாக நடந்தும், பல்வேறு இன்னல்களிற்கு மத்தியில் இங்கு வரவேண்டிய தேவை என்னவென்று புரியாமல் இச்செய்தி பிரசுரிக்கப் பட்டுள்ளது என எண்ணத் தோன்றுகின்றது.

எதுவித பிரத்தியேக வகுப்புக்களோ, அல்லது கற்பிக்கக்கூடிய எவருமோ, இல்லாத இப்பிரதேசத்தில் விடுமுறை மற்றும் விசேட விடுமுறை காலங்களில் கூட தன்னந்தனியாக திருவாட்டிகள் வந்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டு கொளுத்தும் வெயிலில் கூனிக்குறுகி பலமணிநேரம் பேருந்திற்கு காத்திருந்து செல்லும் நிலை இதழாசிரியரின் மனதில் எவ்வாறு எழாமல் போனது என்ற கருத்து வேதனையால் குமுறும் திருவாட்டிகளின் கருத்தைக் கேட்கையில் எமது பிள்ளைகளின் கல்விக்கு மேலும் ஆசிரியர் பற்றாக்குறையை ஏற்படுத்திவிடுமோ என்று உணரத் தோன்றுகின்றது.

திருகோணமலை நகரில் பல பிரபல்யமான பாடசாலைகள் காணப்படுமிடத்து குறிப்பிட்ட பிரபல்யமான பாடசாலையின் பெயரை குறிப்பிட தயங்கும் இதழாசிரியர் எதுவித தயக்கமுமின்றிப் பெரியகுளப் பாடசாலையென எமது பாடசாலையை சுட்டிக்காட்டுவது திருவாட்டிகளினதும் அதிபரினதும் மனங்களிலும், ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது.

பெற்றோர்களால் ஆரம்ப வகுப்பு 1,2,3 ற்கு ஆசிரியர்கள் தேவை என்ற கருத்தில் மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் இறுதியில் ஆசிரியர்கள் மனதைக் புண்படுத்தும் விதமாக தவறான விடயங்கள் பிரசுரிக்கப்பட்டதால் அதற்கு ஓர் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே இப்பிரசுரத்தை தங்கள் முன் சமர்பிக்கின்றோம். எனவே இதழாசிரியரின் தவறான செய்தியை வாபஸ் பெற்று தேவையை மாத்திரம் சுட்டிக்காட்டி உடனடியாக மீளப்பிரசுரம் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

\- ஆசிரியர்கள் -

## கடற்கரைக்கு ரூபா 20.00 சட்டவிரோதம் - "ராவய"

திருகோணமலையில் பிரசித்தம் பெற்ற கடற்கரையான பளிங்குக் கடற்கரைக்குச் செல்பவர்களிடம் அறவிடப்படும் கட்டணம் சட்டவிரோதமானது என ராவய பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.



யுத்தம் நிறைவிற்கு வந்தவுடன் இலங்கை வான்படை பளிங்குக் கடற்கரையில் உல்லாச விடுதியொன்றை நிர்மாணித்துப் பராமரித்து வருகின்றது. அதையொட்டிய கடற்கரையையும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கின்றது.

அதற்காகவே தாம் இருபது ரூபாவைக் கட்டணமாக அறவிடுவதாக அறிவித்துள்ளது.

எனினும் கடற்கரைப் பாதுகாப்புச் சட்டம் 1981 ன் 57ம் பிரிவின் படி கடற்கரையானது அனைவருக்குமான பொதுச் சொத்து என வரையறுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி கடற்கரைக்குள் நுழையும் எவரையும் தடுதது வைப்பதும் அதற்காகக் கட்டணத்தை அறவிடுவதும் சட்டமுரணானது.

இதனையே தனது கருத்தாகவும் பிரதிபலித்த கடற்கரைப் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். அத்துடன் தனது அலுவலர்களை அங்கு அனுப்பி இவ்விடயம் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார். எனினும் வான்படைப் பேச்சாளர் அவ்வாறு பணத்தை அறவிட்டே தாம் அக் கடற்கரையைச் [illegible] பராமரிப்பதற்கும் ஏற்படும் செலவுகளை [illegible] தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை வாய்ப்புக்கள்

முன்பள்ளி நிர்வாகி
தகமைகள் : -
* இளைப்பாறிய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை
* 35 வயதிற்கு மேற்பட்டவர்கள்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
வேலை நேரம்: 7.30 - 1.30 வரை
0262227622

தமிழ் தட்டெழுத்தாளர்
• தமிழில் தட்டெழுத்து செய்யக்கூடியவர்
• Page maker / Photoshop
அனுபவம் கொண்டவர்கள் சிறந்தவர்கள்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்
தொடர்புக்கு: SS Digital
0770773051

விற்பனையாளர்கள் தேவை
காகிதாதிகள் கடையில்
(Trinco Stationery)
வேலைசெய்வதற்கு
விற்பனையாளர்கள் தேவை!
(ஒரு ஆண் ஒரு பெண்)
நல்ல சம்பளம் வழங்கப்படும்
077697083

விற்பனையாளர் ஒருவர் தேவை
படப்பிரதி எந்திரங்களை
(Photo copy machine)
விற்பனை செய்யும் கடையில்
விற்பனையாளராகப் பணிபுரிய
இளம்பெண் ஒருவர் தேவை
0777555738

## காணி கபளீகரம்

அம்பாறை மாவட்டத்தின் உள்ள பூர்வீக தமிழ் கிராமமான பெரிய நீலாவணையில் தமிழ் மக்களுக்கு உரித்தான காணி கபளீகரம் செய்யப்பட்டுள்ளதை தமிழ்த் தே.கூவின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

பெரியநீலாவணை விஸ்ணு ஆலய வீதிக்கும் பெரியநீலாவணை மத்திய வீதிக்கும் இடைப்பட்ட இடத்தில் சுனாமிக்கு பின்னர் 65 மீற்றர் திட்டத்தின் கீழ் கழிக்கப்பட்ட கண்டல் தாவரங்கள் நடுவதற்கு விடப்பட்ட இடத்தினை போலியான உத்தரவு பத்திரம் தயாரித்து நில ஆக்கிரமிப்பு இடம்பெற்றுள்ள விடயத்தை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளேன் என்றார் அவர்.

## தூய குவாடலூபே அன்னை ஆலய வருடாந்த திருவிழா

முச்சந்தி முத்தமிடும் சின்னக்கடை முற்றத்தில் கோயில் கொண்டிருக்கும் தூய குவாடலூபே அன்னை ஆலய வருடாந்த திருவிழாவானது கடந்த 20.09.2013 வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் வட்டார இறை மக்களால் நவநாட்கள் சிறப்பிக்கப்பட்டது.

அத்தோடு திருகோணமலை மறைமாவட்ட அருட்தந்தையர்கள் நவநாட்களுக்கான அருளுரைகளை வழங்கி வைத்தார்கள். 28.07.2013 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் தலைமையில் பங்குச்சிறார்களுக்கு முதன் நன்மை உறுதி பூசுதல் வழங்கி வைக்கப் பட்டது. அன்று மாலை திவ்விய நற்கருணை வழிபாடும் நற்கருணை ஆசீரும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம் பெற்றது. 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு மறைமாவட்ட ஆயர் அதி.வண. கலாநிதி.ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் 12 குருக்கள் கலந்து சிறப்பிக்க திருவிழா கூட்டுத் திருப்பலி மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இத்திருப்பலியில் பல்லாயிரக் கணக்கானோர் ஒன்றிணைந்து பங்கேற்றனர்.





## தம்பலகாமம் பிரதேச செயலக வாணி விழா .

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வாணி விழா நிகழ்வு 2013.10.09ஆம் திகதி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திரு.றொகான் பிரியந்த தசநாயக்க தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவிற்கு பிரதேச செயலக கணக்காளர் திரு.என். சர்க்குணேஸ்வரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கி.விஜயதாசன், நிர்வாக உத்தியோகத்தர். திரு எம்.பற்றிக் அன்ரனி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்,

தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயம் மற்றும் தம்பலகாமம் குளக்கோட்டன் வித்தியாலய மாணவிகளின் பஜனை நிகழ்வுடன் செம்புநடனம். கிராமிய நடனம் பரதநாட்டியம் என்பன இடம்பெற்றன. பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சிங்கள. தமிழ், முஸ்லிம் உத்தியோகத்தர்களுடன் கிராம மக்களும் பங்குபற்றியிருந்தனர். கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்யத கலைஞர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## நீருக்காகத் துயரம் அனுபவிக்கும் சீதனவெளி மீள் குடியேற்ற மக்கள்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சீதனவெளி எனும் கிராமம் அண்மையில் குடியமர்த்தப்பட்டது. இங்கு சுமார் 80 குடும்பங்கள் வாழ்கின்றனர் இக்கிராம மக்கள் போதுமான குடிநீர் வசதி இல்லை என முறையிடுகின்றனர். மேற்படி கிராமம் மிகவும் உயரமான மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள கிராமமாகையால் ஒரு சில பொதுக்கிணற்றை மட்டும் வைத்து தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாகவும் முறையீடுகின்றனர்.இம் மக்கள் சந்தோசபுரம் போன்ற இடங்களில் இருந்து மாற்று காணியாக வழங்கப்பட்டு இங்கு குடியமர்த்தப்பட்டவர்களாவர். முதற்கட்டமாக 56குடும்பங்களும். இரண்டாம் கட்டமாக 24குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டனர் ஆயினும் இப்பகுதியில் இலகுவில் கிணறுகள் அமைக்ககூடிய சூழல் இல்லை என்பதுடன் தற்போது நிலவும் கடும் வரட்சி மற்றும் காற்று காரணமாக ஏற்படும் நீர்த்தேவையை பூர்த்தி செய்யமுடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர்.இதனால் பெரும் சிரமப்படுவதாகவும் இக்கிராம மக்கள் முறையிடுகின்றனர். (மதன்)

# இலங்கையில் தமிழ் பௌத்தம் 02

தமிழ்ப் படைத்தளபதி கணவதி தண்டநாதனார் பாதுகாப்பில் இருந்த திரியாய் விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி

1980 ஆம் ஆண்டு திருகோணமலை நகரத்துக்கு வடக்கே புல்மோட்டைக்குச் செல்லும் பாதையில் 35 மைல் தூரத்தில் அமைந்திருக்கும் திரியாய் பகுதியில் மயிலன்குளம் என்னுமிடத்தில் ஒரு தமிழ்ச் சாசனம் அடையாளம் காணப்பட்டது.

கி.பி 1128 இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இச்சாசனம் ஜயபாகு மன்னனின் 18 ஆம் ஆண்டுக்குரியதாகும். அக்காலப்பகுதியில் திரியாய் பகுதியில் இருந்த உதுத்துறை விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி என்னும் பௌத்தப் பள்ளி தமிழ்ப் படைத்தளபதி கணவதி தண்டநாதனார் பாதுகாப்பில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.

சோழருடைய ஆட்சி விலக்கப்பட்ட பின்னரும் திருகோணமலையில் செல்வாக்கு கொண்டிருந்த தமிழ்ப் படையான வேளைக்காறப் படை இங்கு விக்கிரமசலாமேகன் நாற்படை என குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இதிலிருந்த நாற்படையினர் பௌத்த சமயச் சார்புடையவர்கள் என்பதனையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை 13 ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் பதவியாவிலுள்ள வேளைக்காற சாசனம் லோகநாதன் என்னும் சேனாதிபதி பௌத்த விகாரம் ஒன்றினை அமைத்து அதன் பாதுகாவலராக வேலைக்காரரை நியமித்தமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று இலங்கையில்



வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதான பௌத்த விகாரைகள் தொடர்பான புரிதலுக்கு இலங்கையில் "தமிழ் பௌத்தம்" பற்றிய ஆராய்வு அவசியமாகிறது.

"தமிழ்த் தேரர்கள் ஆற்றிய பணிகள்"

பௌத்தத்தின் திரிசரணம் அல்லது மும்மணி என அழைக்கப்படுவது "புத்தம், தர்மம், சங்கம் ". இதில் "சங்கம்" என்றால் பௌத்த பிக்ஹு"க்களின் கூட்டம். இதுவே இந்த மதம் உலகமெங்கும் பரவுவதற்குக் காரணமாயிருந்தது.

இவர்கள் அந்தந்த நாடுகளில் பேசப்படும் தாய்மொழியில் தங்கள் சமய உண்மைகளை எழுதியும், பேசியும் வந்தனர். இது தமிழில் பௌத்தம் தொடர்பான இலக்கண, இலக்கியங்கள் பலதோன்றுவதற்கு காரணமாக இருந்தது.

"தமிழ் பௌத்தம்" ஏறக்குறைய கி.மு 2ம் நூற்றாண்டு முதல் கி.பி 10ம் நூற்றாண்டு வரையில் தமிழ் நாட்டில் உயர் நிலையில் பெற்றிருந்தது. இதில் தமிழ் பௌத்த துறவி என்றவுடன் நம் கண்முன் வருபவர் கோவலன் மகள் மணிமேகலை.

மணிமேகலை - ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலா காவியத்தின் தலைவி. கோவலனின் துயர மரணத்திற்குப் பிறகு மாதவி தன் மகளை ஒரு புத்தத் துறவியாக வளர்த்தாள்.

மணிமேகலை புகார்ப் பட்டினத்துக்கு அருகில் இருந்த சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த குருடர், முடவர், பசிநோய்கொண்ட வறியவர் முதலியவர்களுக்கு உணவு கொடுத்து ஆதரித்த செய்தியை மணிமேகலையின் 17ஆம் காதை சொல்கிறது. அத்துடன் சிறைக்கோட்டம் சென்று சோழ அரசன் ஆதரவுடன் அதனை அறக்கோட்டமாக்க மாற்றி சிறையில் வாடும் மக்களுக்கு உணவு கொடுத்த செய்தியை மணிமேகலையின் 19ஆம் காதை உரைக்கிறது.

இதுபோலவே தமிழ்த் தேரர்கள் நாட்டு மக்களுக்கு நன்மை புரிந்து கொண்டே பௌத்தமதத்தின் கொள்கைகளையும் போதித்து வந்தபடியால், "தமிழ் பௌத்தம்" தமிழ்நாட்டில் நன்கு பரவியது.

தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெறுவதற்காகப் போட்டியிட்ட நான்கு வடநாட்டுச் சமயங்களில் ஆசீவகமதம் பின்னடைந்துவிட பௌத்தம், ஜைனம், வைதீகம் என்னும் மூன்று மதங்களுக்கு இடையில் பிற்காலத்தில் சமயப்போர் நிகழ்ந்தது. இது கலகங்களாக மாறி அதனை அடக்க அரசன் தலையிட்ட செய்தியை மணிமேகலை இவ்வாறு பதிவு செய்கிறது.



"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்கள் தம்முடனாயினும்,
செற்றமுங் கலாமுஞ் செய்யா
தகலுமின் "

சாத்தமங்கை முதலிய இடங்களில் சம்பந்தரும்,சிதம்பரத்தில் மாணிக்க வாசகரும் பௌத்தருடன் வாதம் செய்து அவர்களைத தோற்பித்துச் சைவராக்கியதும், இலங்கைக்குத் துரத்தியதும் வரலாறு.

கி.பி. 8 ம் நூற்றாண்டில் சமண சமயக் குருவான பேர்பெற்ற ஆச்சாரியரான அகளங்கர் காஞ்சிபுரத்தில் பௌத்த கோயிலாக இருந்த காமாட்சி அம்மன் ஆலயத்தில் பௌத்த பிக்குகளுடன் சமயவாதம் செய்து அவர்களை வென்றார். தோல்வியுற்ற பிக்குகள், இலங்கைக்கு சென்று விட்டனர்.

(தொடரும்....)

**- வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் -**

ஆதாரங்கள்
1. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.
2. பௌத்தமும் தமிழும் - மயிலை திரு.சீனி. வேங்கடசாமி (1900-1980)
3. சமணமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கூட்டமைப்பு எதிர்கொள்ளப்போகும் சவால்

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய வெற்றியைப் பெற்றிருந்த போதிலும், முதலமைச்சர் பதவியேற்பு, அமைச்சர்கள் நியமனம் குறித்து முடிவுகளை எடுப்பதற்கு இரண்டு வாரகாலம் பிடித்துள்ளது.

ஒரு பிரமாண்டமான தேர்தல் வெற்றிக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்த விவகாரங்களில் நீடித்த இழுபறியும் சிக்கல்களும், வடக்கு மாகாணசபையை வெற்றிகரமாக கொண்டு நடத்துவதில் உள்ள சவால்களை வெளிப்படுத்தியுள்ளன.

முதலமைச்சர் யார் முன்னிலையில் பதவியேற்பது என்ற விவகாரத்திலும், அமைச்சர்கள் நியமனம் குறித்தும் எழுந்த இழுபறிகள், ஒரு பிரமாண்டமான வெற்றிக்குப் பிந்திய சூழலை, கவலைக்குரிய விவகாரமாக்கி விட்டது.

வடக்கு மாகாண முதல்வராக யாரை நிறுத்துவது என்று, மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், கிட்டத்தட்ட இதேபோன்றதொரு இழுபறி நிலை கூட்டமைப்புக்குள் தோன்றியிருந்தது. ஆனால், கடைசியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முன்னிறுத்திய, ஓய்வுபெற்ற நீதியரசர்



சி.வி.விக்னேஸ்வரனே முதன்மை வேட்பாளர் என்ற ஒருமித்த முடிவுக்கு இணங்கும் நிலை ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில், இது இரா.சம்பந்தனின் தன்னிச்சையான நியமனம் என்ற விமர்சனங்கள் எழுந்த போதிலும், இந்த முடிவை தமிழ் மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு, மாகாணசபைத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அளிக்கப்பட்ட, ஒரு இலட்சத்து 31 ஆயிரம் விருப்பு வாக்குகளே சாட்சியாக உள்ளன.

விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்தாமல் போயிருந்தால், இத்தகைய பிரமாண்டமான வெற்றியை தமிழ் மக்கள் கொடுத்திருப்பார்களா? வேறொரு முதன்மை வேட்பாளரால், இந்தளவுக்கு விருப்பு வாக்குகளைப் பெற்றிருக்க முடியுமா என்பதெல்லாம் கேள்விக்குரிய விடயங்கள் தான்.

தேர்தல் அறிவிப்பு வெளியானதும், முதலமைச்சர் வேட்பாளர் விடயத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், சற்று சலசலப்புகள் நிலவினாலும், வி.வி.விக்னேஸ்வரன், முன்னிறுத்தப்பட்ட பின்னர் அவை யெல்லாமே அடங்கிப் போயின.

அதுபோலவே தான், தேர்தலில் வெற்றி பெற்றதும், யார் முன் பதவியேற்பது, யார் யாரை அமைச்சர்களாக நியமிப்பது என்ற விடயத்திலும் இழுபறிகள் தோன்றின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வேட்பாளர்களை அறிவித்த போது, அவர்களில் அரசியல்வாதிகளல்லாத துறைசார்ந்த விற்பன்னர்கள் பலரும், உள்ளடக்கப்பட்டிருந்ததால், தேர்தலில் வெற்றி பெற்றால், அமைச்சர்கள் நியமனத்தில் சிக்கல்கள் ஏற்படலாம்

ஒரு கட்டத்தில். இது இரா.சம்பந்தனின் தன்னிச்சையான நியமனம் என்ற விமர்சனங்கள் எழுந்த போதிலும். இந்த முடிவை தமிழ் மக்கள் எந்தளவுக்கு ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு. மாகாணசபைத் தேர்தலில் சி.வி.விக்னேஸ் வரனுக்கு அளிக்கப்பட்ட. ஒரு இலட்சத்து 31 ஆயிரம் விருப்பு வாக்குகளே சாட்சியாக உள்ளன.

என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்தப் பிரச்சினை தான் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வெடித்தது.

முதலமைச்சர் வேட்பாளரை முன்னிறுத்தியே போட்டியிட்டதால், தேர்தல் வெற்றிக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் அதுகுறித்த முரண்பாடுகள் ஏற்படவில்லை. ஆனால், முதலமைச்சர் யார் முன்னிலையில் பதவியேற்பது என்ற விடயத்தில், கிட்டத்தட்ட ஒரு தேவையற்ற சர்ச்சையே தோன்றியதாகத் தெரிகிறது. சட்டவிதிகளையும், மரபுகளையும் மட்டுமன்றி, காலச் சூழலையும் கவனத்தில் கொண்டு செயற்படுவது தான் வெற்றிகரமான அரசியல் தலைமைகளின் பண்பாக இருக்க முடியும்.

இந்த விடயத்தில் இரா.சம்பந்தனும் சி.வி.விக்னேஸ்வரனும் எடுத்த முடிவுகள், ஒரு தரப்பினருக்கு ஜீரணிக்க முடியாததாக இருந்தாலும், தற்போதைய அரசியல் நடைமுறைக்கு அதைவிடப் பொருத்தமான அணுகுமுறை வேறேதும் இருந்திருக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், கடும் போக்காளர்களும் மென் போக்காளர்களும் மட்டுமன்றி, இரண்டுக்கும் இடைப்பட்டவர்களும் உள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்பதன் மூலம், அரசாங்கத்துக்கு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்துவது மட்டுமன்றி, சர்வதேச சமூகத்துக்கும் ஒரு தெளிவான செய்தியைக் கொடுக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதிலும் தான் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள ஒரு தரப்பினர் பிரசாரத்தில் இறங்கியது தான் வேடிக்கையான விடயம்.

தேர்தலின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு வேட்பாளரும் எந்தவொரு கட்சியும் தாம், இலங்கை அரசாங்கத்தின் உதவிகளைப் பெறாமல் ஆட்சியை நடத்துவோம் என்றோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்பாக பதவியேற்க மாட்டோம் என்றோ வாக்குறுதி கொடுத்திருக்கவில்லை.

அப்படி வாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்றிருந்தால், அது வடக்கு மாகாண மக்களின் தீர்ப்புக்கு எதிரானது என்ற முடிவுக்கு வர முடியும். மத்திய அரசின் முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள ஒரு மாகாணசபையில், வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் எதிர்க்கட்சி ஒன்றினால் ஆட்சியை நடத்துவது எத்தனை சிரமமான காரியம் என்பதை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே வெளிப்படுத்தியிருந்தார்.

மேல் மாகாணத்திலேயே இத்தகைய நிலை என்றால், வடக்கில் நிர்வாகத்தை நடத்துவதற்கு எந்தளவுக்கு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஊகிப்பது எவருக்கும் கடினமாக இருக்காது.

எல்லாவற்றுக்கும் மத்திய அரசையே நம்பியிருக்க வேண்டியதொரு சூழலில், தமக்கு வாக்களித்த மக்களின் தேவைகளை அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டுமானால், வடக்கு மாகாணசபை, அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டால் தான் சாத்தியமாகும்.

தேசியப் பிரச்சினை விடயத்தில் கடைப்பிடிக்கப்படுவது போன்று, மாகாணசபை நிர்வாகத்தையும், முரண் அரசியல் போக்கில் அணுக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தனிக்குமேயானால், அடுத்த தேர்தலின் போதும் அரசாங்கம் எதையும் தரவில்லை, எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றே



வாக்குக் கேட்கும் நிலை ஏற்படும்.

மத்திய அரசாங்கத்திடம் உதவியைப் பெறாமல், மக்களின் தேவைகளை நிறைவேற்றாமல், மாகாண நிர்வாகம் ஒன்றை இயக்குவதால், யாருக்கும் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

இதனால், அடுத்த தேர்தலில் இத்தகையதொரு நிர்வாகம் எதற்கு என்று சிந்திக்கும் நிலைக்கு வடக்கிலுள்ள மக்கள் தள்ளப்படுவார்கள். அதற்காக, இணக்கப்போக்குடன் செயற்பட்டால், மாகாணசபைக்கான எல்லா உதவிகளையும் மத்திய அரசாங்கம் செய்யும் என்று முழுமையாக கருதிவிட முடியாது.

ஆனால், அத்தகையதொரு நிலைக்கு ஒருபோதும், மாகாண நிர்வாகம் பொறுப்பல்ல என்ற உண்மையை, மக்களால் மட்டுமன்றி, சர்வதேச சமூகத்தினாலும் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், பதவியேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனும் எடுத்த முடிவு, தூரநோக்குக் கொண்டவை.

இந்தச் சூழலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின்



தலைவர்களும் உறுப்பினர்களும் புரிந்து கொண்டாலும், அவர்கள் தமது நிலையில் இருந்து வெளிவரத் தயாராக இல்லை. இது தான் இந்தச் சிக்கலின் அடிப்படை.

இந்தளவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட அனைவரும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள அனைவருமே, இலங்கையை துண்டாடுவதற்குத் துணைபோக மாட்டோம் என்ற சத்தியக்கடதாசியை கொடுத்துள்ளவர்கள் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் நியமன விடயத்திலும் எழுந்த சிக்கல் சற்று வேறுபட்டது. நான்கு கட்சிகள், ஐந்து மாவட்டங்கள், துறைசார் நிபுணத்துவம் என்று பல்வேறு சிக்கல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முகம் கொடுக்க நேரிட்டது.

ஆனால், கடைசியில் முதல்வர் விக்னேஸ்வரன் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்வார் என்று அறிவிக்கப்பட்டதும் தான் அந்த விவகாரத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி பிறந்தது.

இவையெல்லாம், வடக்கு மாகாணசபையை கொண்டு நடத்துவது ஒன்றும் சுலபமான காரியமாக இருக்காது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளன.

அதாவது, ஒருபக்கத்தில் மத்திய அரசாங்கம், இன்னொரு பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் போக்காளர்கள், மற்றொரு பக்கத்தில் சர்வதேச சமூகம், என்று மும்முனை அழுத்தங்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல், வடக்கு மாகாண நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வது மிகவும் சவாலுக்குரிய விடயம் தான்.

ஆனாலும், நீதிமன்றத்தில் எப்போதும் இருவேறு முரண்பட்ட வாதங்களுக்குள் நடுநிலையுடன் செயற்பட்டுப் பழகிப் போனவர் என்பதால், எத்தகைய முரண்பட்ட கருத்துகள் எழுந்தாலும், அதைச் சமாளிக்கும் திறன் பெற்றவராக வடக்கு மாகாண முதல்வர் இருப்பது தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகப்பெரிய பலம்.

**கே. சஞ்சயன்**

(நன்றி தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திராய்க்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில்

## முதல் மாணவி சித்தி

கடந்த வாரம் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் திராய்க்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஜே. மிதுர்சியா 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பாடசாலை வரலாற்றில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதலாவது மாணவி எனும் பெருமையைப் பெற்றுள்ளார். பாடசாலை அதிபர் , கற்பித்த ஆசிரியருடன் மாணவி மிதுர்சியா நிற்பதனைப் படத்தில் காணலாம். (பி.எம். பர்ஹாத்)



## மேமன்கவியின் "மொழி வேலி கடந்து" நூல் வெளியீடு




"நவீன சிங்கள இலக்கியங்கள் மீதான பார்வை'' என்ற குறிக்கோளைக் கொண்டு மேமன்கவியால் வரையப்பட்ட "மொழி வேலி கடந்து....'' என்னும் நூல் எதிர்வரும் 20.10.2013 அன்று கொழும்பு மெசஞ்சர் வீதியில் உள்ள பிறைட்டன் ரெஸ்ட் விடுதியில் வெளியிடப்படவுள்ளது.

தாய்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளில் போதியளவு அறிவற்ற இலக்கிய வாசகர்களுக்கு சிங்கள மொழியின் சமகால இலக்கியப் போக்கு எவ்வாறிருக்கின்றது? என்பதை அறிய உதவும் புத்தகமாக இப் புத்தகம் அமைந்துள்ளது. முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்ளவுள்ளார். நூலறிமுகத்தினை கே.எஸ் சிவகுமாரன், பல்கலை விரிவுரையாளர் தம்மிக ஜயசிங்க, மொழிபெயர்ப்பாளர் ஹேமசந்திர பதிரண நிகழ்த்தவுள்ளனர்.

### சம்மாந்துறையில் கிழக்கு மாகாண சிறுவர் தின விழா



இம்முறை 2013ம் ஆண்டுக்கான கிழக்குமாகாண சிறுவர் தின நிகழ்வுகள் சம்மாந்துறையில் பகல் போசனத்துடன் சிறுவர் நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.முபாரக் தலைமையில் மிக விமர்சியாக இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக கிழக்குமாகாண



சுகாதார சுதேச வைத்திய சமுக சேவைகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் ஐ.எம். மன்சூர், கௌரவதிதியாக கிழக்குமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி எஸ். அமலநாதன் அவர்களும், சம்மாந்துறை காவல் நிலைய பொறுப்பதிகாரியும் கிழக்குமாகாண பிரதேச செயலாளர்களும் , கிழக்கு மாகாண சிறுவர் துஸ்பிரயோக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு காசோலைகளும் பரிசில்களும் அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது. (பர்ஹாத்)

## எத்தனை காலம் தான்......?

## ...நாட்டு நடப்பு...

பலர் உழைத்து சிறப்பாக வாழ்ந்தாலும் சிலருக்கு உழைப்பது என்றால் ஒரே அலர்ஜி சிலர் எவ்வளவுதான் உழைத்தாலும் அடுத்தவரை சுரண்டிப்பிழைப்பதிலே மிக கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அது மாத்திரமல்ல அடுத்தவரின் சட்டைப்பைக்குள் கையை நுழைய விடுவதில் அவர்கள் காணும் சுகத்திற்கு வேறொன்றுமே நிகராக இருக்காது.

அது போன்ற அநாகரிக செயல்களை புரியாவிட்டால் சிலருக்கு இரவில் தூக்கமே வராது அன்று புதிதாக சிறைக்கு வந்த கைதியிடம் " ஏனப்பா இவ்வளவு நேரமாக தூங்காமல் இருக்கிறாய்? " என்று சிறை அதிகாரி கேட்டதற்கு அந்த கைதி சொன்னானாம், " எனக்கு ஒரு நாளைக்கு ஒரு பூட்டைத்தானும் உடைக்காமல் விட்டால் அன்று இரவு பூராக தூக்கமும் வராது அத்துடன் அடுத்த நாள் முழுவதும் ஒரு காரியத்தை தானும் செய்ய மனமும் வராது" என்றானாம்.

சிலர் தாம் புரிவதை சரியானதெனவும் அதில் எவ்வித தவறும் இல்லை எனவும் நியாயப்படுத்த முயற்சிப்பர். சிலர் அவை தவறென தெரிந்து கொண்டு தொடர்ச்சியாக தவறை புரிவார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் சூடு, சுரணை அற்றவர்கள் என்று அழைப்பது வழமை அவர்கள் எதையிட்டும் கவலையும் படமாட்டார்கள் அத்துடன் வெட்கமும் படமாட்டார்கள் .

அப்படிப்பட்டவர்கள் எதையும் தமாஷாக செய்து விட்டு, அவை கையும் களவுமாக பிடிபட்டால் எப்படியோ மழுப்பிவிட்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பார்கள். அவ்விதமான குணாதிசையங்களை கொண்டவர்தான் அந்த ஊரில் சாரதியாக இருக்கும் 35 வயது நிரம்பிய இன்னும் திருமணமாகாத ஒருவர். இரு தடவைகள் வெளிநாடு சென்று வந்தவர். ஆனால் மாற்றி உடுப்பதற்கு தகுந்த உடைகள் தானும் அவரிடம் இல்லை. அவர் மாத்திரமல்ல அவரின் தாயார் கூட வெளிநாடு சென்று வந்தார். அவர் ஒரு தமிழ் பெண்மணியாக இருந்தும் உருவம் மாறி முஸ்லிம் பெண் ஒருவரின் பெயரில் கடவுச்சீட்டை போலியாக தயாரித்து வெளிநாடு சென்றவர் நமது நாட்டில் அப்படிப்பட்ட காரியங்களை துணிந்து செய்யக்கூடிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சிகள் இன்று எத்தனையோ இயங்குவதை நாம் அறியாமலல்ல. எதற்கும் பணம் இருந்தால் போதும் பணத்தால் எதையும் சாதிக்கலாம். அன்று அந்த பிரதேசத்தில் மிகவும் பிரசித்தம் பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் கைநிறைய சம்பாதித்த அந்த சாரதி பேராசை காரணமாக செய்த தொழிலை விட்டு வெளிநாடு சென்றவர். இன்று ஒரு தொழிலும் இன்றி வீட்டில் முடங்கிக் கிடக்கிறார்.

அம்மாவும், மகனும், வெளிநாடு சென்று வந்தும் கடன் தொல்லைகள் அவர்களை விட்டு இன்னும் போகவில்லை அவர்கள் படலையை தட்டுபவர்கள் அனேகமாக கடன் கொடுத்தவர்கள்ளை விட வேறு ஒருவரும் அவர்களை தேடி வர மாட்டார்கள். தகப்பனார் ஓய்வூதியம் பெறுபவர் மேலும் அவருக்கு பல கெட்ட பழக்கங்களும் உண்டு.

குடும்பத்தினர் பட்டினி கிடந்தாலும் கண்டும் காணாததுபோல் நடந்து கொள்வார். அவருக்கு அயல் கிராமத்தில் ஒரு தவறான உறவு உண்டு. அவர் பெறும் ஓய்வூதியத்தில் அரைவாசி அந்த தவறான உறவை தாபரிப்பதற்கு செலவு செய்வார். குடும்பத்தில் அவர் எந்தவித அக்கறைகளும் காட்டாததினால் அவரின் பெண்பிள்ளைகள் தவறான வழியில் தத்தமக்கு தேவையான துணைகளை தேடிக் கொண்டனர்.

அவரின் உடல் அமைப்பு பத்துப் பேரை ஒரே நேரத்தில் தாக்க கூடிய பலம் கொண்டது ஆனாலும் தனது மனைவியையும் மகனையும் வெளிநாடு அனுப்பி அவர்களின் பணத்தில் காலத்தை ஓட்டியவர். இன்று அந்தக் குடும்பம் ஊரில் எவருக்கும் இல்லாத கடன்சுமையை தாங்கிக் கொண்டு மிகவும் சீரழிந்த நிலையில் வாழ்வதற்கு காரணம் அங்கு திட்டமிடல் ஒன்று இல்லாததேஅது மாத்திரமல்ல அந்த குடும்பத்தில் எவருக்கும் போதிய கல்வி அறிவும் இல்லாததும் அவர்களின் கஷ்ர நிலைக்கு முக்கிய காரணமாகும்.

செருப்புத்தைப்பவர், மரக்கறி விற்பவர் ,மீன் விற்றவர்கள் மளிகைக்கடைக்காரர், பேக்கரிக்காரர் அத்தனைபேருக்கும் அக்குடும்பத்தினர் கடன்காரர்களாக இருக்கின்றனர். இன்று அவர்களை நம்பி அப்பகுதியில் உள்ள எந்தவொரு கடைக்காரரும் கடன் கொடுக்க முன்வருவதில்லை காரணம் இவர்கள் பயங்கரமான பட்டப்பகல் ஏமாற்றுக்காரர்கள் என்பதே.

அவற்றையெல்லாம் விட வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், சீட்டுப்பிடிப்பவர்கள், நகை அடகு பிடிப்பவர்கள் என்றெல்லாம் அவர்களின் விடயத்தில் பட்டியல் தயாரித்துக் கொண்டே செல்லலாம். ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் சகலதும் பெரும் பணக்காரர்களின் நடவடிக்கை போன்றே இருக்கும்.

அவர்கள் பட்டினி கிடந்தாலும் சோர்வடையாதவர்கள் மாதிரி தென்படுவார்கள். காரணம் அனைவரும் பெரும்பருமனான தோற்றத்தைக் கொண்டவர்கள் " கடன் பட்டு சாப்பிட்டால் உடம்பு என்றுமே தளராது" என்று ஊரார் கூட பேசிக்கொள்வார்கள் மேலும் அவர்கள் என்றுமே கடன் வேண்ட தயங்குவதில்லை அவ்வாறே கடன் கொடுப்பது தொடர்பாக அவர்கள் கவலைப்படுவதே இல்லை.

தற்பொழுது தாயாரின் மழு முயற்சி மகனை கொழுத்த சீதனத்திற்கு பண்டமாற்றம் செய்வதே. ஆனால் அவர்களின் குடும்ப நிலைபற்றி சகலருக்கும் தெரிந்துள்ளதால் அந்த முயற்சியும் பயனளிக்காது ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

மேலும் மகனுக்கு ஒரு தகுந்த வேலை தேவை என்பதால் அவ்வூரில் வாகனசாரதி தொழிலொன்றை அவர் பெற்றுக்கொடுத்தார். சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின் அந்த தொழிலும் அவரின் கையை விட்டு நழுவிப் போனது காரணம் கவலையீனமாக வாகனத்தை செலுத்தி உரிமையாளருக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியதே.

அதன் பின்னர் நகரிலுள்ள பெரும் வர்த்தக நிலையமொன்றின் லொறி சாரதியாக வேலைக்கு சேர்ந்தார். அது ஊரிலே பெரிய லொறியாகும் சந்தியிலிருந்து வீட்டுக்கு வரும் வரை அந்த வாகன'ஹோர்ன்' சத்தத்தை ஊர் அதிரும் வகையில் எழுப்பி வருவார். அது அவரின் வழமையான செயற்பாடுகளில் ஒன்றாகும்.

அது மாத்திரமல்ல அந்த லொறிக்கு தாங்களே உரித்தானவர்கள் என்று ஊர் அறிய வேண்டும் என்பதற்காக வீட்டு வாசல் முன் அதை கம்பீரமாக நிறுத்தி வைப்பது மாத்திமல்ல பகல், இரவு பார்க்காது குடும்பத்தின் அத்தனை பேரும் சேர்ந்து அதை கழுவி, துடைப்பதில் பெரும் அக்கறை காட்டுவார்கள். நிதமும் அப்படியே ஒரே " பந்தாவாக" இருக்கும் அக் குடும்பத்தினரின் செயற்பாடு. எப்படியோ குறித்த வர்த்தக நிலையத்திற்கு சாரதியின் தகாத நடவடிக்கைகள் தெரியவந்தது மாத்திரமல்ல சாரதியினால் மேற் கொள்ளப்பட்ட மன்னிக்க முடியாத பல தவறுகளினால் அவர் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

அவரால் இனியும் ஊரில் தலைகாட்ட முடியாது. மீண்டும் வெளிநாடு செல்ல தீர்மானித்து கொழும்பு ஏஜன்சியை தற்பொழுது சந்திக்க சென்றுள்ளார். இப்பொழுது "யானை வரும் பின்னே மணியோசைவரும் முன்னே" எனும் வாகன ஹோர்ன் சத்தமும் ஓய்ந்து விட்டது." எனது மகனுக்கு சூரை மீன்தான் பிடிக்கும்'' என்று அம்மா மீன்காரர்களிடம் அடிக்கும் தம்பட்டமும் ஓய்ந்து விட்டது. " அற்பனுக்கு பவுசு வந்தால் அர்த்த இராத்திரியிலும் குடைபிடிப்பான்'' என்ற முதுமொழியை மட்டுமே அந்த ஊராரிடம் இருந்து கேட்க கூடியதாகவுள்ளது.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

# மனம் காயப்பட்ட கன்னியின் கண்ணீர் மடல்

என் இதய அறைகள் எங்கும் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் அன்பின் அன்னையே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு அகிலத்து அரசனவன் திருநாமம் போற்றி உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் அன்பும் புஷ்பங்களாய் தூவட்டும் எனப் பிரார்த்தித்தவளாய் உங்கள் மகள் அன்பு மகள் மர்யம் இம்மடலை வரைய ஆரம்பிக்கிறேன்.

உம்மா! முத்து முத்தாய் கோர்த்தெழுதப்பட்ட உங்கள் காகிதம் கரம் கிட்டியது அல்ஹம்துலில்லாஹ் நான் அடைந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது உம்மா! ஆனால் அதே மடல் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாத அளவு ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. என் கண்ணில் கண்ணீர் பெருகி கரைபுரண்டோடியது. உம்மா! ஏன் இந்த மாற்றம் உங்களுக்குள் இந்த மாயமான உலகில் ஆடம்பரமாய் வாழ்வதற்காகவா? 25 வருடங்கள் பாசத்துடன் இணைந்திருந்த உங்களையும் என் அன்பு சகோதரிகளோடு உறவாடும் இனிமையான மாலைப் பொழுதுகளையும்... தினம் தினம் நலம் விசாரிக்கும் என் வீட்டு ரோஜா செடிகளையும்... பிரிந்து கடல் கடந்து மத்திய கிழக்கிற்கு வந்தேன்.

உம்மா! நான் கடந்து வந்த முள்ளான பாதைகளில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் மறந்து போனதா உங்களுக்கு? சத்தியமாக என்னால் இந்த ரணமான நாட்களை மறக்க முடியவில்லை உம்மா! எப்படி உம்மா அந்த வேதனை சோதனை நிறைந்த அந்த நாட்களை மறக்க முடியும்....?

எந்தப்பெண்ணுமே தனது வாழ்க்கையில் மறக்காது மனதில் வைத்திருப்பது அவளது அழகிய அந்த திருமண நளைத்தான். நானும் அன்று மணமகளாய் மணமேடையில் வீற்றிருந்தேன். என்னை அலங்காரப்படுத்தி வைத்தார்களே உற்றார் உறவினர்கள் அக்கம் பக்கத்தவர்கள் சொந்த பந்தங்கள் அனைவரும் அமர்ந்து பந்தியில் சாப்பிட்டுக்கொண்டிந்தார்களே! அன்றைய தினம் சந்தோச ஊஞ்சலில் பலகனவுகளோடு இருந்தேனே! மணமகன் என்கரம் பிடித்து மணமுடிக்க சில வினாடிகள்தான் இருக்கும்......

அல்லஹ்வின் நாட்டமா.. அல்லது என் விதியா? பெண்ணாய் பிறந்த பாவமா? தெரியவில்லை தன்னுள் தேக்கி வைத்திருந்த சுமைகளை ஒரேயடியாக இறக்கி வைத்துவிட்டு என் வாப்பா வபாத்தாகிப் போன அந்த வினாடியில்... நானும் நீங்களும் சகோதரிகளும் எதுவும் செய்வதறியாது திகைத்து போனோமே! சந்தோசமாய் கலகலப்பாய் சிரிப்புச் சத்தம் கேட்ட எம் வீட்டில் கதறல் ஒலி கேட்டதே அந்த சங்கடமான தருணத்தில் கதிகலங்கிப்போன அந்த நேரத்தில் எனக்கு மாமியாக வர இருந்தவர் தொடுத்த வினாக்களால் கதிகலங்கிப்போனோமே ஞாபகம் இருக்கிறதா உம்மா!

" அத்திவாரம் போட்டால் போதுமா? வீட்டை யார் கட்டித்தருவது? என் மகனின் தொழிலுக்கு யார் ஆட்டோ வாங்கித்தருவது? சீதனப் பணம் தருவதாக வாக்களித்த உன் வாப்பாவே வாய் பேசமுடியாது வபாத்தாகி போய் விட்டார் உங்களால் எதுவும் செய்ய முடியாது"

என்று வெந்த புண்ணில் வேலை பாச்சுவது போல துருவித்துருவி கேள்வி கேட்டார்களே! அந்த கேள்விகள் இப்போதும் என் இதயத்தில் முள்ளாக குத்துகின்றதே! உம்மா! இரத்தம் கொதித்ததே.

மனம் கலங்கி அந்த நேரத்தில் எதுவித சலனமுமின்றி என் கரம்பிடித்து திருமணம் முடிக்க முன் வந்த மணவாளனை தன் கையோடு அழைத்துக்கொண்டு சென்றாளே அந்த சீதன அரக்கியவள். அப்போது என் இதயம் இடிந்து போனதே உள்ளம் உருகியதே அந்நேரம் ஆடி ஓய்ந்த பம்பரமானெனே! அப்போது ஊமையாகி பேனதே என் உறவுகள் அது மட்டுமா? அதற்கு பிறகு வந்த நாட்களில் நாம் பட்ட வேதனைகள் துன்பங்கள் கை கட்டி வேடிக்கை பார்த்து கொண்டிருந்த எம் உறவுகள் என் வெளிநாட்டுப் பயணம் பற்றி ஏதோ வெல்லாம் பேசிக் கொள்கின்றார்கள்.

" வந்து விடு மகளே என உங்கள் மடலில் எழுதியுள்ளீர்கள். உம்மா! யாரும் எதையும் பேசிக் கொள்ளட்டும் ஊர் ஆயிரம் பேசும் அது பற்றி கவலை படக்கூடாது நான் மத்திய கிழக்கிற்கு வந்ததன் நோக்கம் என்னைப் படைத்தவனுக்கும் எனக்கும்தான் தெரியும்.



உம்மா! திருமணம் என்பது ஆயிரம் காலத்து பயிர் ஆனால் என் வாழ்க்கையில் அது கசப்பான அனுபவம் கனவில் கூட கரைசேர முடியாத காகிதக் கப்பல் தான் நான். இப்போது சிதைந்து போன சித்திரமாய் மத்திய கிழக்கில் நான்.....

உம்மா! என் மனக் கோட்டைகளை மண் கோட்டையாக சீதனம் கேட்கும் அரக்கர்களால் இடிக்கப்பட்டது போல் என் சகோதரிகளின் வாழ்க்கையிலும் ஏற்படக்கூடாது கொஞ்சம் கொஞ்சமாக பணம் அனுப்புகின்றேன் அத்திவாரம் இடப்பட்ட வீட்டை சகோதரிகளுக்கு கட்டிக்கொடுங்கள் வாப்பா கூட இப்போது நம்மோடு இல்லையே! என்ன செய்வது பெண்ணாய் பிறந்தவளுக்கு கண்ணீர்தான் சொந்தம் என்ற வேதனை என் சகோதரிகளுக்கு வரக்கூடாது இன்னும் ஒரு வருடத்திற்குள் திருமணம் முடித்து கொடுக்க வேண்டும்.

திருமண வயதை அடைந்திருக்கும் என் சகோதரிக்கு மஹர் கொடுத்து மணம் முடிக்கும் மணவாளர்கள் வரும் வரை அல்லாஹ்விற்காக பொறுமையா ளர்களுடன் அல்லாஹ் எப்போதும் இருக்கின்றான் என்று சுவனத்தில் கொள்ளுங்கள். பொறுமையாளர்களுக்கு வெகுமதிகள் காத்திப்பதாகவும் சகோதரிகளுக்கு வெகுமதிகள் காத்திருப்பதாகவும் சகோதரிகளுக்கு கூறுங்கள்.

பாசக்கரம் தந்த உம்மா! இன்று சீதனக் கொடுமையால் முழு பெண் சமூகமும் வாழாவெட்டியாய் தவிக்கின்றது அவர்களின் ஏக்கப் பெருமூச்சுக்களும் நிராசைகளும் ..... அப்பப்பா...... அனுபவித்த எனக்குத்தானே தெரியும்! உம்மா நானும் நீங்களும் மட்டுமல்ல சீதனம் கேட்கும் அரக்கர்களால் சித்திரவதைப்படும் அவ்வணியிலே எத்தனையோ பெற்றோர்களும் பெண்களும் கதவுகளின் மூலையில் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றார்கள் சதா நிம்மதியின்றித் தவிக்கின்றார்கள். சீதனத்தால் சீரழிந்து போயுள்ளது. நம் சமூகம் சூறாவளி பேச்சாளர்களும் சீர்திருத்த எழுத்தாளர்களும் சாடோ சாடென்று சாடித்தள்ளியது தான் மிச்சம் சீதனமோ பணமாய் வீடாய் நகையாய் வாகனமாய் வீட்டுப்பாவனைப் பொருட்களாய் பல அவதாரங்களில் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிக்கின்றது சீதனம்.

இதற்கு காரணம் ஆண்கள் மட்டுமல்ல என்பதை நீ உணர்ந்து கொள் ஆனால் முழுப்பெண் சமூகமும்.....? கேட்டாலும் கேட்காவிட்டாலும் கௌரவக் குறைச்சல் என்று நினைப்பது அவர்களல்லவா! இஸ்லாத்தின் கொள்கைகளை திருப்பித் திருப்பி படித்தாலும் இவற்றை மற்ற யாரும் முன் வரக்காணோமே! மகளின் மேனியில் ஜொலிக்கும் நகைகளின் கனத்தில்தானே தாயின் சந்தோசமும் தந்தையின் கௌரவமும் மாமியாரின் மதிப்பும் தங்கியிருக்கிறது.

உம்மா பிராத்தியுங்கள் ஐவேளைத் தொழுது அழகாய் பிராத்தியுங்கள் எமது சமூகத்தில் ஆழமாய் வேர் விட்டிருக்கும் விருட்சம் வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும் இலட்சம் கேட்கும் மனங்களும் சாம்ராஜ்ஜியம் கட்டப்பட வேண்டும் அவர்களின் வாழ்க்கை படகுகளும் கரைசேர வேண்டும்.

உம்மா....! பெண்களின் கண்ணீருக்கும் ஒரு வகையில் பெண்களே காரணமாய் இருக்கின்றனர். " நீங்கள் பெண்களுக்கு அவர்களுடைய மஹரை கண்ணியமான முறையில் கொடுத்து விடுங்கள்" எனக் கூறும் குர் ஆனிய வரிகளை மனதினில் நிறுத்தி பணத்தை பார்க்காது பெண் மனத்தினை பார்த்து பெண் எடுக்கும் மாமிகளாகவும் மதினிகளாகவும் எம் பெண்கள் மாற வேண்டும். இவ்வாறான ஒரு மாற்றம் எம் சமூகத்தில் வருமானால் நிச்சயமாக எம் பெண்களின் கண்ணீர்த்துளிகளை துடைக்கமுடியும் பாலைவனமான உள்ளம் சோலைவனமாக வேண்டும். சீதனம் கொடுப்பதற்காய் கடல் கடந்து சென்ற என் போன்ற பெண்களின் கண்ணீர் நாளை எங்கள் வாலிபர்களை மஹ்சரில் குற்றவாளிக் கூட்டில் நிறுத்த போகிறது வெள்ளைத் தோலுக்கும் முல்லைச் சிரிப்புக்கும் கோடிப் பணத்திற்கும் மாடி வீட்டிற்கும் ஆசைப்படும் ஆண்களும் ஆண்களை பெற்ற பெண்களும் நாளை மஹ்சதில் பதில் சொல்ல வேண்டி வரும் உம்மா! உன் சகோதரிகளுக்காகவும் சமூகம் பெண்களுக்காகவும் இப்படி சிந்திக்கின்றாயே! உன் வாழ்க்கையை நினைத்து பார்க்க வில்லையா..? என நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. உம்மா! இந்த மர்யம் மஹர் கொடுத்து மணம்முடிக்க மனம் உவந்து மணவாளன் வரும்வரை பொறுமையாக இருப்பாள் அப்படி இல்லையேல் எனக்காக நீங்கள் இருக்கின்றீர்களே? வாழ்க்கை எனக்கு பல பாடங்களை கற்றுத்தந்து விட்டது உடைந்து போன உள்ளத்துக்கு யார் உம்மா! ஒத்தடம் போடுவது...?

உங்களை விட எந்த ஜீவனையும் பொருளையும் இந்த உலகில் நான் காணவில்லை உம்மா! நீங்கள் என் தலைமுடிகளை அன்பாய் கோதிவிட உங்கள் மடியில் நான் உறங்கிப் போகும் அந்த இனிமையான நாட்களையும் உங்கள் கையால் பிசைந்த சோற்றை உண்பதற்காய் சகோதரிகளோடு சண்டையிட்ட இராப் பொழுதுகளையும் இங்கு தனிமையில் இருந்தவளாய் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது என் உள்ளம் துன்பக் கடலில் மூழ்கி எழுகிறது என்ன செய்வது பொறுமையாகத்தானே இருக்க வேண்டும்?

பெண்ணாக பிறந்த விட்டால் எல்லாவற்றையும் அனுபவிக்கத்தானே



வேண்டும் அல்லாஹ் அதற்கான நற்கூலியை தருவான். வரட்சி கண்ட இவ் உள்ளம் குளிர்ச்சி அடைய வேண்டும். வாழ்க்கை எனும் சக்கரத்தை இவ் உலகில் உள்ளவரை ஓட்டிச் செல்லத்தான் வேண்டும். இடையில் நின்றுபோன எனது திருமண நாளை மறக்கமுடியுமா? ஆறாத வடுக்களாக என் மனதில் பதிந்துவிட்டது. உம்மா..... இம்மடலை உங்களுக்கு எழுதியதால் என் கரங்கள் வலித்தாலும் என் மனச்சுமைகளை இறக்கி வைத்த சந்தோசத்தில் விடை பெறுகிறேன்.

இப்படிக்கு
அன்பு மறவா மகள்.
மர்யம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கிராமத்து நினைவுகள்

வயல் வரம்புகளில் வழுக்கிடாமல்
ஓடித்திரிந்து........
வரால்மீனும் கெழுத்தியும்
பிடித்துக் கறி சமைத்து
காசியப்பரின் சோளத்தை
களவாய் பறித்துவித்து...
மரவள்ளிக் கிழங்குசுட்டு
திப்பிலிக் கொச்சியோடு
சேர்த்துண்டு...

வயற் குடிலில் படுத்துறங்கி....
கனாக்களின்றிப் பொழுதுபோக்கி....
கடைசிவரை பிரியாதிருந்தோம்...
வேப்பமர ஊஞ்சல்
காட்டுக்கோழிப் பொறி
வேட்டையென உடும்பாய்
ஓணான் பிடித்து
பொயிலைச் சாறு கொடுத்தோம்...

கணக்குப் பாட வாத்தியாரின்
பிரம்கடி...
காலை நீ கொண்டு வரும்
பழஞ்சோறும் கத்தரிக்காய்ப் பொரியலும்
கண்ணீரைக் காரணமாக்கிப்
பெற்றுக் கொண்ட முத்தங்கள்...
பாடப்புத்தகத்துள் மறைத்துவைக்கும்
வாழ்த்து அட்டைகள்
பரீட்சைக்காய் பரிமாறிக் கொண்ட
பேனாக்கள்...
மறந்துவிட முடியாத நினைவுகளவை..

வழமைபோல உன்னைப் பார்க்க வந்து
திரும்பிப் போனேன் - நீ
வயதுக்கு வந்து விட்டதாய்
பேசிக்கொண்டார்கள்...!
சில நாட்களில் உன்னிலும் மாற்றம்
வெட்கப்பட்டுக் கொண்டாய்
அளவுக்கு அதிகமாய்...
கவலைப்பட்டேன் நம் நாட்டுச்
சுதந்திரமாய் நீயும் எனக்குக்
கிடைக்காமலேயே போய்விடுவாயோ
என்று...!



**ச. கோபிரமணன்**

## கவி முரசு

உன்கைகளுடன்

கைகள் பிணைத்து

இந்த உலகம் முழுவதும்

சுற்றிவர வேண்டும்

என்னைத் தாங்கிக்

கொள்ளேன்

உன் தோள்களில்

கொஞ்ச நேரம்

சுகமாக அழவேண்டும்



**ஜே.மதிவதனி**



## 'தனி' நாயகம்!

(திருமலையில் நடைபெற்ற தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவையொட்டிய கவிதை)

குடத்தின் விளக்கைக் குன்றின்மேல் ஏற்றியவர்
படத்தின் அழகமைதி பாருங்கள்! - இடத்தை
யாதுமூர் என்றேகி யாவருங்கேளிர் எனத்
தாதையாய் நின்றார் தனி!

என்னை நன்றாக இறைவன் படைத்துள்ளான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்ய - என்றே
தமிழைத்துறக்கும் தகுதி அறியாமல்
தமிழோடிணைந்தார் தனி!

படித்த பெரியார் பலர் உள்ளார், மாநாடு
எடுத்த பெரியார் இவரன்றோ? - மடுத்த
செவிக்கே பெரும்பேறு, செவிடாம்பிற, இன்று
தவிக்கிறதே தமிழும் தனி!

நாயகரின் நூற்றாண்டு நல்லவிழா கண்டோர்
நேயம் மிகுந்தோர் - நிகரற்றோர்! - தூய
தமிழ்த் தூதரைப் பற்றித் தமிழாவோம்,
ஊரெங்கும் கமழட்டும் தமிழ், வணக் கம்!

**தாமரைத்தீவான்**

# முட்களின் நடுவே ரோஜாக்கள்

யுனிசெவ் நிறுவனத்தின் அண்மைய ஆய்வறிக்கை இலங்கையில் இளவயது திருமணங்கள் அதிகரித் திருப்பதாக சுட்டிக் காட்டியிருந்தது. இவ்வாய்வில் ஆய்வுக்களமாக கிழக்கு மாகாணம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**04. பெற்றோர் பிள்ளைகளை விட்டு வெளிநாடுகளுக்கு செல்லுதல்.**

ஐந்து வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளை உடைய தாயார் எக்காரணம் கொண்டும் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாது என்ற சட்டம் நாட்டில் நடைமுறையில் உள்ளபோதும், மோசடித்தரகர்களின் ஒத்துளைப்புடன் ஏமாற்றுப் பத்திரங்களைச்சமர்பித்து தொடர்ச்சியாக பச்சிளங்குழந்தைகளைக் கூட



உறவினரின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு அன்னையர்கள் வெளிநாடு செல்கின்ற நிலைநீடிக்கின்றது. சில குடும்பங்களில் தாய் - தந்தை இருவருமே பிள்ளைகளை நிர்க்கதியாக்கி விட்டு வெளிநாடுகளுக்கு சென்று விடுகிறார்கள். மேலும் பிரிந்த குடும்பங்களின் பிள்ளைகள் வாழ்வு பெரும் சவால் நிறைந்ததாகவும் ஆபத்துக்கள் சூழ்ந்ததாகவும் உள்ளது. பொறுப்பற்ற விதத்தில் பிள்ளைகளைப் பெற்று . இவ்வாறு அனாதைகளாக்கி விட்டு செல்லும் பெற்றோர்கள் தொடர்பாக உடனடியாக தகவல்களைத் தெரிவிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும்

பெற்றோரின் பிரசன்னமற்ற சூழலில் பிள்ளைகள் பல்வேறு விதமான உடல், உள மற்றும் பாலியல் கொடுமைகளுக்கு பலியாகின்றார்கள். எனவே இருக்கின்ற வளங்கள் வாய்ப்புகளைப் பயன்படுத்தி உள்நாட்டில் சிற்சில தொழில் முயற்சிகளுக்கூடாக குடும்பவருமானத்தை உயர்த்தி பிள்ளைகளுடன் உடனிருந்து அவர்களின் நலன்களை கவனிக்கின்ற அர்ப்பணிப்பு பொறுப்பு வாய்ந்த பெற்றோர்களையே சிறுவர்கள் எதிர்பார்கிறார்கள்.



**05.பெற்றோர் பிள்ளைகளுக்கு செவிமடுக்கும் பண்பு வளர்ச்சிகாண வேண்டும்.**

இன்றைய பெற்றோர் பிள்ளைகளுக்கு தேவையான அனைத்தையும் வழங்கினாலும் இவை பிள்ளைகளின் உளவியல் தேவைகளை போதியளவில் பூர்த்தி செய்வதில்லை குறிப்பாக பிள்ளைகளின் அன்பிற்கான, பாசத்திற்கான, செவிமடுக்கப் படுவதற்கான தேவைகள் பெரும்பாலும் பெற்றோர்ரினாலும் மற்றோரினாலும் உதாசீனப்படுத்தப்படுகின்றன. இதனால் பிள்ளைகள் சொந்த வீட்டிலேயே தனிமையையும், மனவெறுப்பையும் அனுபவிக்க நேரிடுகின்றது.

பிள்ளைகளின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள், ஆர்வங்கள் மற்றும் அவர்கள் தினந்தோறும் பாடசாலைகள் போன்றவற்றை மனம் விட்டு தாய் தந்தையிடம் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படும் குடும்பங்களில் வளர்கின்ற பிள்ளைகளின் உள நலன் மேம்பட்டுக் காணப்படுகின்றன என உளவியல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், இத்தகைய குடும்பங்களில் பிள்ளைகளின் கல்வி அடைவுகள் முன்னேற்றகரமாகவும், சீர்மியமான மேம்பட்ட நடத்தைகளை கொண்டதாகவும் காணப்படுகின்றன. இவர்கள் பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் வெகு குறைவு பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டாலும் ஆரோக்கியமாக சீக்கிரமே அவற்றிலிருந்து வெளியில் வந்து விடுகின்றார்கள்.

### சிறுவர்களின் நல்வாழ்விற்காக எம்மை அர்ப்பணிப்போம்

எனவே எத்தகைய அவசர சடுகுடு வாழ்க்கைச்சூழல் இருப்பினும் பிள்ளைகளிடம் நாள்தோறும் குறிப்பிட்ட நேரம் உரையாடும் பழக்கத்தை



பெற்றோர்கள் கொண்டிப்பது பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் மிகவும் அவசியமாகும். வீட்டில் நீண்டநேரம் தொலைக்காட்சி பார்க்கும் கலாசாரத்தை நிறுத்திவிட்டு குடும்பத்தில் உள்ளவர்கள் பரஸ்பரம் உரையாடும் மனம் விட்டு பேசும் பண்பு வளர்க்கப்படும் போது எமது பிள்ளைகள் ஆரோக்கியமான வளர்ச்சியை வெளிப்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சிறார்களிடம் பொதிந்துள்ள கற்பனைத்திறன், புத்தாக்கத்திறன் மற்றும் ஏனைய திறமைகளை அவர்கள் உரியவாறு வெளிக்கொணர்வதற்கும் அவற்றைப் பயன்படுத்தி தமது வாழ்வில் வெற்றியாளர்களாகத் திகழ்வதற்கும் வழி அமைத்து கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எம் எல்லோருக்கும் உரியது.
எவ்வித துஸ்பிரயோகங்களுமற்ற சுதந்திரமான மகிழ்ச்சியான ஆக்கபூர்வமான சூழலை ஏற்படுத்துவதற்கு ஒவ்வொரு குடும்பங்களும் முன்வரவேண்டும்.

சிறுவர்களின் உடல் தேவைகளை மட்டுமல்லாது உளதேவைகளான அன்பு, பாசம் மதிக்கப்படுதல், ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் பிள்ளைகளின் குரலுக்கு செவிமடுத்தல் ஆகியவையே சிறுவர்களுக்காக நாம் வழங்கக்கூடிய அதிசிறந்த பெறுமதிவாய்ந்த ' சிறுவர் தின ' பரிசாகும்.

சிறார்களின் மகிழ்ச்சியே எமது உண்மையான மகிழ்ச்சி என்பதை உணர்ந்து சிறுவர்களின் நல்வாழ்வுக்காக எம்மை அர்ப்பணிப்போம்.

- முற்றும் -

**ச.அல்பேட் றீகன்**
B.A.Psy., M.Sc. HRD Psy.(India)
**மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மாவட்ட செயலகம்**
**திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சற்குணத்திடம் சரணடைந்த நஸ்ரியா



இயக்குனர் சற்குணத்திடம் மானசீகமாக மன்னிப்பு கேட்டுள்ளாராம் நஸ்ரியா நசீம். நய்யாண்டி படத்தில் நஸ்ரியாவுக்கு டூப் வைத்து தொப்புளைக் காட்டிய விவகாரம் லேசாக அணைய ஆரம்பித்திருக்கிறது.

இயக்குனர் சற்குணம் மற்றும் தயாரிப்பாளர் எஸ்.கதிரேசன் மீது கமி'னர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் நஸ்ரியா. அதற்குப் பிறகு மீடியா நண்பர்களுக்கு பாடலைத் திரையிட்டுக் காட்டுகிறேன், வேண்டுமானால் நஸ்ரியாவும் பாடலைப் பார்த்து பதில் சொல்லட்டும் என்றும் உறுத்தலாக இருந்தால் அந்தக் காட்சியை நீக்கவும் தயார் என கூறியுள்ளார் சற்குணம்.

இதனைத் தொடர்ந்து இன்று காலையில் நஸ்ரியா அப்பா நசீம், நஸ்ரியாவின் வழக்கறிஞர், தயாரிப்பாளர், சைபர் க்ரைம் அதிகாரிகள் நய்யாண்டி படத்தை போர் பிரேம்ஸ் ப்ரிவியூ திரையரங்கில் பார்த்தார்களாம்.

சர்ச்சைக்குரியதாக சொல்லப்பட்ட அந்தக் காட்சி ஆபாசமாகவும், கவர்ச்சியாகவும் இல்லை என்பது தெளிவானதால் அதற்குப் பிறகு சமரச பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. உறுத்தலான அந்தக் காட்சியும் படத்தில் இருந்து நீக்கப்பட இருக்கிறது.

இதனால் சற்குணத்திடம் எமோஷனலாகி மானசீகமாக மன்னிப்பு கேட்டாராம் நஸ்ரியா.

## வில்லன் அவதாரத்தில் உலகநாயன்



உத்தம வில்லன் திரைப்படத்தில் வில்லனாக நடிக்கிறார் உலகநாயகன். விஸ்வரூபம் 2 படத்துக்குப் பிறகு கமல் நடிக்கவிருக்கும் அடுத்த படத்துக்கு உத்தம வில்லன் என்று பெயரிடப்பட்டுள்ளது.

லிங்குசாமி தயாரிக்கும் இந்தப் படத்தில் கமல் வில்லனாக நடித்தாலும், நல்ல வில்லனாகத்தான் வருகிறாராம். ஆரம்பத்தில் இந்தப் படத்தை கமலே இயக்குவதாக இருந்தது. ஆனால் பின்னர் அந்த வாய்ப்பை தன் நண்பரான ரமேஷ் அர்விந்துக்கு தந்துவிட்டார்.

இதை கமல் அதிகாரப்பூர்வமாக அறிவித்தும் விட்டார். இதுகுறித்து ரமேஷ் அரவிந்த் கூறுகையில், கமல் நடிக்கும் படத்தை இயக்குவது மகிழ்ச்சியாகவும் பயமாகவும் இருக்கிறது.

ஏற்கனவே கமலை வைத்து கன்னடத்தில் சதிலீலாவதி படத்தை ரீமேக் செய்து இயக்கினேன். தற்போது லிங்குசாமி தயாரிப்பில் கமலை வைத்து இயக்குகிறேன்.

## சுவிஸில் பிரம்மன்



சுவிட்சர்லாந்தில் ரொமான்ஸ் செய்ய கிளம்புகிறது சசிகுமாரின் பிரம்மன். குட்டிப்புலி படத்திற்கு பிறகு சசி குமார் நடிக்கும் திரைப்படம் பிரம்மன்.

இப்படத்தினை அறிமுக இயக்குனர் சாக்ரடீஸ் இயக்குகிறார். மஞ்சு சினிமா தயாரிக்கும் இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். இதில் சசிகுமாருக்கு ஜோடி போட்டுள்ளார் புதுமுக நாயகி லாவண்யா.

வேகமாக வளர்ந்து வரும் இப்படத்தின் இரண்டு பாடல்கள் சுவிட்சர்லாந்தில் படமாக்கப்படவுள்ளதாம். இதற்காக சசிகுமார், லாவண்யா மற்றும் நடன இயக்குனர் ராஜீ சுந்தரத்துடன் சேர்த்து 40 துணை நடிகர்களும் சுவிஸ் பறக்கிறார்கள்

## சின்னத்திரையில் சிநேகா



சின்னத்திரையில் தொகுப்பாளராக களமிறங்கவுள்ளார் புன்னகை இளவரசி சிநேகா. பிரசன்னாவை மணந்த பின்னர் விளம்பரங்களின் மூலம் ரசிகர்களை சந்தித்து வந்தார் சிநேகா.

இந்நிலையில் தற்போது சன் தொலைக்காட்சியில் கேம்ஷோ ஒன்றை தொகுத்து வழங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. காதல் திருமணம் செய்து கொண்ட சிநேகாவும், பிரசன்னாவும் இப்போது தனிக் குடித்தனம் நடத்தி வருவது சினிமா வட்டாரமே தெரிந்த செய்திதான்.

சிநேகா, பிரசன்னா இருவருக்குமே சொல்லிக் கொள்கிற மாதிரி படங்களும் கைவசம் இல்லாததால் விளம்பரங்களில் மட்டுமே நடித்து வருகின்றனர்.

இதுநாள் வரை பல்வேறு தொலைக்காட்சி தொடர்களிலும், நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க வந்த அழைப்புகளை வேண்டாம், முடியாது என்று மறுத்து வந்தவர், தற்போது ஓகே சொல்லிவிட்டாராம். அதாவது, சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருக்கும் மிகப்பெரிய கேம் ஷோ ஒன்றினை தொகுத்து வழங்க உள்ளாராம்.

பளபளக்கும் பட்டுப் புடவையிலும், ஜொலி ஜொலிக்கும் நகைகளிலும் தகதகவென மின்னப் போகிறார். இதற்காகவே படப்பிடிப்பு அரங்கில் பிரம்மாண்டமான செட் போடப்பட்டு கடந்த சில வாரங்களாக சூட்டிங் நடைபெற்று வருகிறதாம். வெள்ளித்திரையில் இருந்து விடைபெற்று விட்ட சிநேகாவை இனி சின்னத்திரை கேம் ஷோ மூலம் கண்டு ரசிக்கலாம்.

## நிஜத்திலும் ரஜினி ஒரு ஹீரோ: ஹ்ரித்திக்



நிஜ வாழ்க்கையிலும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஒரு ஹீரோ என்கிறார் ஹ்ரித்திக் ரோஷன்.

பாலிவுட் முன்னணி நாயகர்கள் அத்தனை பேரும் சூப்பர் ஸ்டார் ரஜினியின் புகழ் பாடுவது இப்போது சகஜமாகிவிட்டது. குறிப்பாக அவர்களின் புதிய படங்கள் வெளியாகும்போது ரஜினிக்கு செலுத்தும் மரியாதையே தனி. இப்போது அந்தப் பட்டியலில் ஹ்ரித்திக் ரோஷனும் இடம் பெற்றுள்ளார். ரஜினியுடன் குழந்தை நட்சத்திரமாக தான் நடித்ததை நினைவு கூர்ந்துள்ளார்.

1986ல் வெளியான பகவான் தாதா படத்தில் ரஜினியுடன் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார் ஹ்ரித்திக்.

இதுகுறித்து அவர் கூறுகையில், எத்தனையோ ஹீரோக்கள் இருந்தாலும், ரஜினி சாருடன் இணைந்து பணியாற்றத்தான் நான் பெரிதும் விரும்புகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன் அவர் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நான் நடித்துள்ளேன். ரஜினி மீது எனக்கு மிகப்பெரிய மரியாதை உண்டு. அவர் எனக்கு வழிகாட்டியைப் போன்றவர். மேலும் ஒரு உதாரண புருஷராக நின்று எனக்கு பல விடயங்களைக் கற்றுத் தந்திருக்கிறார்.

வாழ்க்கையிலும் அவரே ஹீரோ என்றும் என் தந்தைக்கு நிகராக நான் மதிக்கும் ரஜினி சாருடன் இணைந்து பணியாற்றுவது மிகப் பெரிய பெருமை எனவும் கூறியுள்ளார் ஹ்ரித்திக்.

மேலும் ரஜினியிடம் தான் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய உள்ளதாகவும் ஆன்மீகம் சம்பந்தமாக அவரிடம் பயிற்சிகள் பெறப்போவதாகவும் கூறியுள்ளார்

## டிமாண்டில் விஜய் சேதுபதியின் படங்கள்



விஜய் சேதுபதியின் இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா படத்துக்கு சிறப்பான ஓபனிங் கிடைத்தது. பீட்சாவுக்குப் பிறகு வெளியான விஜய் சேதுபதியின் எந்தப் படமும் சோடை போகவில்லை, வசூலும் கம்பீரம்.

அதனால் அவரது அடுத்தடுத்தப் படங்களுக்கு செம டிமாண்ட். தற்போது வெளியான இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா படத்துக்கு சிறப்பான ஓபனிங் கிடைத்தது. விஜய் சேதுபதியின் இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா படத்துக்கு சிறப்பான ஓபனிங் கிடைத்தது.

பீட்சாவுக்குப் பிறகு வெளியான விஜய் சேதுபதியின் எந்தப் படமும் சோடை போகவில்லை, வசூலும் கம்பீரம். அதனால் அவரது அடுத்தடுத்தப் படங்களுக்கு செம டிமாண்ட். குறிப்பாக இப்படத்தின் இயக்குனர் கோகுலுக்கு அடுத்ததாக ஸ்டியோ கிரீன் தயாரிப்பில் அடுத்த படத்தை இயக்குவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாம்.

மேலும் தற்போது விஜய் சேதுபதியின் நடிப்பில் உருவான பண்ணையாரும் பத்மினியும், ரம்மி போன்ற படங்கள் வெளியீட்டிற்கு தயாராக உள்ளன. ரம்மி படத் தயாரிப்பாளர்கள் படத்தின் விளம்பரத்தை இன்று வெளியிட்டுள்ளனர். விரைவில் ஓடியோவை வெளியிட்டு படத்தை வெளியிடும் முயற்சியிலும் இறங்கியுள்ளனர். இந்நிலையில் ரம்மிக்கு முன்பே பண்ணையாரும் பத்மினியும் தொடங்கப்பட்ட விட்டதால், முதலில் எந்த படம் வெளிவரும் என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

## செம ருசியில் ஜெய்யின் 'வடகறி'

ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கிணங்க விறுவிறுப்பான கட்டத்தில் தயாராகி வருகிறது ஜெய்யின் வடகறி. சுப்பிரமணியபுரம் படத்தில் இணைந்து நடித்த ஜெய்-சுவாதி ஜோடி மீண்டும் வடகறி என்ற படத்தில் இணைந்து நடித்து வருகிறார்கள்.

க்ளவுட் நைன் சார்பில் தயாநிதி அழகிரி தயாரிக்கும் இந்தப்படத்தை சரவணராஜன் இயக்குகிறார். கொலவெறி புகழ் அனிருத் இசையமைக்கிறார். இந்தப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சமீபத்தில் இந்தப்படத்திற்காக அபாரமான சில காட்சிகளை சுட்டுத் தள்ளியிருக்கிறார் இயக்குனர் சரவணராஜன்.

முதற்கட்ட படப்பிடிப்பு இன்னும் சில நாட்களில் முடிந்துவிடும் என்றும் விரைவில் அடுத்தகட்டம் நகரும் என தெரிவித்துள்ளார் இயக்குனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மாண்டமாக உருவாகுகிறது Facebook Town

இன்றைய காலகட்டத்தில் பேஸ்புக் இல்லை என்றால் எதுவே இல்லை என்று கூறும் அளவுக்கு மக்கள் அடிமையாகி உள்ளனர். உலகளவில் பிரபலமான சமூக வலைத்தளங்களில் பேஸ்புக் முதலிடம் வகிக்கிறது.

இந்நிலையில் பேஸ்புக் நிறுவனம், சேன்பிரான்சிஸ்கோவில் உள்ள St.Anton என்ற பில்டிங் நிறுவனத்துடன் இணைந்து ஒரு புதிய டவுனை உருவாக்க உள்ளது. பேஸ்புக்கில் வேலை செய்யும் ஊழியர்களுக்காக இங்கு வீடு கட்டப்படுகிறது.

இதன் மதிப்பு 120 மில்லியன் டொலர் ஆகும். Anton menlo என்ற பெயர் கொண்ட இந்த பிராஜெக்டில் 208 சிங்கிள் பெட் 'ரூம் அப்பார்ட்மெண்ட். 139 டபுள் பெட் 'ரூம் அப்பார்ட்மெண்ட் மற்றும் பேஸ்புக்கில் உள்ள உயர் அதிகாரிகளுக்காக 12 டிரிபுள் பெட் 'ரூம் அப்பார்ட்மெண்ட் கட்டப்பட உள்ளது.

மேலும் 35 ஸ்டுடியோக்கள், ஸ்விம்மிங் பூல், ஸ்பா, காம்பிளக்ஸ்கள் என அனைத்தும் இதில் அடங்கும்.



## மின்னல் மூலம் செல்போனுக்கு சார்ஜ்

மின்னலில் உள்ள சக்தியின் மூலமாக செல்போனில் சார்ஜ் ஏற்ற முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பிரிட்டனிலுள்ள செப்த்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இக்கண்டுபிடிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானிகளில் ஒருவரான நீல் பால்மர் கூறியதாவது, நோக்கியா நிறுவனமானது இத்தகைய சவாலை எங்களிடம் ஒப்படைக்கும்போது நாங்கள் உற்சாகமானோம். முதலாவது மின்மாற்றியின் மூலமாக மின்னல் சக்தியை ஒத்த 2,00,000 வோல்ட்ஸ் மின்சாரத்தை 300 மில்லி மீட்டர் இடைவெளியில் செலுத்தி, அந்த சமிக்ஞைகளை இரண்டாவது மின்மாற்றி மூலமாக செல்போனுக்கு சார்ஜ் ஏற்றும் அளவிலான மின்சாரமாக மாற்றினோம்.

இதன் மூலமாக இயற்கை சக்திகளை மனித பயன்பாட்டுக்கு கொண்டுவர இயலும் என்று கண்டறியப்பட்டுள்ளதாக பால்மர் தெரிவித்தார்.

# விளையாட்டுப் பையன்

## எண்ணெய்தன்மை கொண்ட கூந்தல் பராமரிப்பு



எண்ணெய் தன்மை கொண்ட கூந்தல் என்றால் பிரச்சனை அதிகம். உ"ணம் அதிகரிக்கும் போதும், டென்'ன் கூடும் போதும் எண்ணெய் அதிகம் சுரக்கும். இந்த வகையான கூந்தலைக் கொண்டவர்களின் மயிர்கால் எப்பொழுதும் எண்ணெயில் ஊறியது போல காட்சியளிக்கும். கூந்தலை அடிக்கடி கழுவாவிட்டால் சொறி ஏற்படும்.

பங்கல் இன்பெக்ஷன் வாய்ப்பு மிக அதிகம் என்பதால் தினமும் கூந்தலுக்கு ஷாம்பு போட்டு கழுவவேண்டியதிருக்கும். கழுவும்போது ஹேர் ஸ்கிரபர் பயன்படுத்தி தலை சருமத்தை தேய்த்து கழுவ வேண்டும். வறண்டு போய் காணப்படும் முடியின் கீழ்ப்பகுதியில் மட்டும் கண்டிஷனர் போடலாம்.

முடி உலர்ந்த பின்பு சீவுவதற்கு முன்பு ரொம்ப வறண்டு போய் காணப்பட்டால் சிரம் போட்டுகொள்ளலாம். தலை சருமத்தில் இன்பெக்ஷன் இருந்தால் 15 நாட்களுக்கு ஒருமுறை சிறிதளவு பீர் எடுத்து அதில் பஞ்சை முக்கி மண்டை ஓட்டுப்பகுதியில் தேய்த்து கழுவுவது நல்லது.

### சொக்லெட்

சொக்லெட்களுக்கான உங்கள் ஏக்கத்தை தீர்த்துக் கொள்ளுங்கள். அதில் உள்ள அனான்டமைன் மூளையில் உள்ள டோபமைன் அளவை கட்டுப்பாட்டில் வைக்கும். அதனால் மனம் அமைதி பெற்று மன அழுத்தம் நீங்கும்.

# ஒரு கொலையின் கதை

24 (மாயன்)



**அலிகவை கதிரையில் இருந்து எழுப்பி அழைத்துச் செல்லத் தொடங்கினர் புலனாய்வாளர்கள்... அவன் மிக உறுதியாக அவர்களுடன் நடந்து சென்றான்... அவனது மனைவியோ அந்த வீட்டில் தனியாக நின்றாள்.......**

அப்போது தான் அவளுக்குப் புரிந்தது. தனது கணவன் மிகப் பெருங் குற்றமொன்றில் சந்தேகத்திற்கிடமானவனாகக் கைது செய்யப்பட்டுள்ளான் என்பதை.

அப் பெண் சராசரிக் கல்வியை விட சற்றே அதிகம் கற்றவள் என்பதால் தனது கணவனைக் கைது செய்யக் காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளை அவள் நினைத்துப் பார்த்தாள். சாதாரண குற்றமாக இருந்தால் காவல்துறை அலுவலகத்திற்கு அழைப்பு வந்திருக்க வேண்டும். அவ்வழைப்பையேற்றுத் தாம் அங்கு சென்றிருந்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளியாகக் கண்டால் கைது நடந்திருக்கும். ஆனால் தனது கணவனின் கைதோ முற்றும் எதிர்மறையாகவல்வா நடந்துள்ளது என்று எண்ண...எண்ண அவளை அறியாமலே திகில் அவள் மனதைச் சூழ்ந்து கொண்டது.

தமது வீட்டிற்கு அப் புலனாய்வுக் காவல்துறையினர் முதன் முதலில் வந்த விதம் அவள் மனக் கண்ணில் படமாக விரியத் தொடங்கியது.

பண்பும் பணிவும் மிக்க இரண்டு இளைஞர்கள் விலாசம் விசாரிக்க வந்த போதில் அவர்களின் நடத்தை எவ்விதச் சந்தேகமும் அவர்கள் மீது கொள்ள வைக்கவில்லையே..... இன்றோ அதே இரண்டு இளைஞர்களின் முகத்தில் குடிகொண்டிருந்த கடுமையும், துணிவும், தனது கண்ணின் முன்னாலேயே தனது கணவனின் வாய்க்குள் கைச்சுடுகலனைச் செலுத்திய வேகம்.... அவளை மெதுவாக நடுங்க வைத்தது. தனது கணவனை அவர்கள் சுற்றிவளைத்துக் கைது செய்த விதம்... அவனர் அறையை மூடி காப்பிட்டமை (Seal) இரண்டுமே அவன் செய்துள்ளதாகச் சந்தேகிக்கும் குற்றத்தின் பரிமாணத்தை அவளுக்கு வெளிக்காட்டியது.

அதைவிட அலிகவைக் கொண்டே அவர்கள் டொடிக்குத் தொடர்பை ஏற்படுத்திய போது தான் திடீரென அலிகவிற்கு முளைத்த அவனது நண்பனும் இக் குற்றத்தில் சந்தேகத்திற்கிடமானவனாக இணைக்கப் பட்டிருப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

அலிக இலண்டனில் இருந்து ஏன் திரும்பி இலங்கைக்கு வந்தான் என்பதையிட்டு அவள் எப்போதுமே அவனைக் குடைந்து கொண்டே இருந்தாள். எனினும் அவன் அதற்காகச் சொன்ன பல காரணங்களை அவளால் ஏற்க முடியாது போய்விட்டது. அவள் அக்காரணங்களை ஏற்கின்றாள் இல்லை என்பதால் நாளும் பொழுதும் புதுப் புதுக் காரணங்களை அவன் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டு வந்தான். எனினும் எவையுமே அவளுக்குத் திருப்தி தருவதாக இல்லை.

இலங்கைக்கு வந்தவுடன் அலிக மிகவும் பரபரப்பாகவே செயற்பட்டுக் கொண்டிருந்தான். அப் பரபபரப்பின் ஊடே திடீரென வீட்டிற்குள் வந்து முளைத்தவன் தான் டொடி.

டொடியை அவள் கண்ட முதலாவது நாளே அவன் பழகுவதற்குப் பொருத்தமானவன் அல்லன் என்பதை அவள் உள்மனது தெரிவித்திருந்தது.

அதனால் அவள் அவனிடமிருந்து விலகியே இருந்தாள் அதேபோலவே அலிக வையும் அவனிடமிருந்து விலகி இருக்கச் சொல்லிப் பலதடவைகள் அவள் வலியுறுத்தியும் அலிக அவ்வாறு செய்யவில்லை. அதற்கு அலிக சொன்ன காரணம் தான் வான்படைப்பிரிவுப் பொறியியலாளராகச் சேர்வதற்கு டொடியின் உதவி தேவையாக இருப்பதாகவும், டொடி படைப் பிரிவிலிருந்து தப்பியோடிய படையினன் என்பதால் அவன் ஊடாக படைப்பிரிவு அதிகாரிகளுடன் தனக்குப் பேசக் கூடியதாக இருப்பதாகவும் அவன் தெரிவித்திருந்தான்.

படைப்பிரிவிலிருந்து தப்பியோடியவர்களால் தமது கிராமங்களில் நடக்கும் அட்டூழியங்களை அவள் நன்றாக அறிந்திருந்தால். டொடி படைப்பிரிவில் இருந்து தப்பியோடிய படையினன் என்பதை அறிந்த பின் அவன் தொடர்பாக அவளுக்கிருந்த கொஞ்சநஞ்ச மதிப்பும் பறந்த போய்விட்டிருந்தது.

அவர்கள் இருவரும் சந்திக்கும் போதெல்லாம் தனது அறைக்குள்ளேயே அவனை அழைத்துச் சென்று அலிக பேசுவது அவளுக்குச் கொஞ்ச சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்ததாயினும் மிகப் பெருங்குற்றமொன்றை அலிக தனது வாழ்நாளிற் செய்வான் என்று அவள் சிந்திக்கவே இல்லை.

அவர்கள் வேறு எவ்விடத்திலும் சந்திக்காமல் எப்போதுமே வீட்டில், அலிகவின் அறைக்குள் சந்திப்பதால் அவள் டொடியைப் பற்றி மிகப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

திடீரென 2012ம் ஆண்டின் மார்ச் மாதத்தில் தனக்கு மூன்று லட்சம் ரூபா பணம் தேவையாக இருப்பதாகவும் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அலிக அவளிடம் தெரிவித்திருந்தான். ஏன் எனக் கேட்ட போது தனது வேலை விடயம் என்றும், அப்பணத் தொகையை டொடியிடம் கொடுக்க வேண்டும் என்றும் அலிக தெரிவித்திருந்தான்.

ஆனால் அதன் பின்னர் எப்போதுமே அலிக அப்பணம் தொடர்பாக வாயே திறக்காமல் இருந்தான். ஆனால் 2012ம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் சில நாட்கள் டொடியுடன் அலிக முதன் முதலாக வெளியே சென்றான். அவன் திருகோணமலைக்குச் செல்வதாகவும் அங்கு சீனன்குடா வான்படைத்தளத்தின் அதிகாரிகளைச் சந்திக்க இருப்பதாகவும் தெரிவித்தான். அக்காலத்தில் தான் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டால் தவிர எக்காரணம் கொண்டும் தனக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அவளிடம் வற்புறுத்தித் தெரிவித்திருந்தான். இடைக்கிடையே திருகோணமலையில் இருந்து அலிக அழைப்பை ஏற்படுத்தியிருந்தான். அந்நேரத்தில் எல்லாம் மிகவேகமானத் தனது அழைப்பைத் துண்டிப்பதிலேயே அவன் அக்கறை காட்டியிருந்தான்.

சுமார் ஐந்து நாட்களின் பின்னர் வீடு திரும்பிய அவன் வந்த வேகத்திலேயே தனது அறையின் கதவைத் தாளிட்டு விட்டது அவளுக்கு அப்போது ஞாபகம் வந்தது. பயணம் முடிந்த பின் தனது உடைப்பையைத் தூக்கி வீட்டிற்குள் எறியும் அவன், அன்று மட்டும் தனது பையைப் பவித்திரமாகத் தனது அறைக்குள் எடுத்துச் சென்றது அவளுக்குச் சட்டென உறைத்தது. வேகமாக அவனது அறைக்குச் செல்ல அவள் முனைந்த போதுதான் அவ்வறையின் கைப்பிடிகளின் மீது ........ (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் சச்சின்



இந்தியாவின் நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர ஆட்டக்காரரும், பல்வேறு சாதனைகளை படைத்தவருமான சச்சின் டெண்டுல்கர், தனது 200வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்குப் பிறகு ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

மேலும் தனக்கு ஆதரவு அளித்து வந்த கிரிக்கெட் வாரியத்துக்கும், இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். இது குறித்து பிசிசிஐக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்பது எனது வாழ்நாள் முழுவதுமான கனவு.

கடந்த 24 ஆண்டுகளாக அந்த கனவோடுதான் வாழ்ந்து வந்தேன். கிரிக்கெட் விளையாடாமல் இருப்பதை என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஏன் என்றால், நான் எனது 11வது வயதில் இருந்து கிரிக்கெட் விளையாடி வருகிறேன். எனது நாட்டுக்காக உலக நாடுகள் பலவற்றிலும் நான் விளையாடியதில் பெருமை அடைகிறேன் என்று தெரிவித்துள்ளார். கடந்த 1989ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதன் முதலாக களமிறங்கி விளையாடி சச்சின், இதுவரை 198 போட்டிகளில் விளையாடி 15,837 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

## கிரிக்கெட் போட்டியில் மட்டு. செவிப்புலன் வலுவற்றோர் அணி வெற்றி



மட்டக்களப்பில் செவிப்புலன் வலுவற்றோருக்கிடையில் நடைபெற்ற ஆறு ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் அணி வெற்றியீட்டியது.

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 13ஆவது நிறைவையொட்டி மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்றது. ஆறு ஓவர்களைக் கொண்ட இக்கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றின.

இதில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட அணிகள் இறுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டன. இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி 5 ஓவர்கள் முடிவில் 80 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 4.4 பந்து வீச்சு ஓவர்களில் 81 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இதில் மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த எஸ்.தஸ்மிதன் 31 ஓட்டங்களை பெற்று சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார்.

# முஸ்லிம் காங்கிரஸின் போக்கும் அதன் தலைமையும் 02

குருநாகல் மாவட்டத்தில் கடந்த காலம் வடமேல் மாகாண சபையில் மு.காவுக்கு 02 உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால் இம்முறை நடந்து முடிந்த வடமேல் மாகாண சபை தேர்தலில் வாக்குகள் குறைந்துள்ளதுடன் ஒரு உறுப்பினரை மட்டுமே பெற்றுள்ளது. இந்த வாக்குச்சரிவு நிலை முஸ்லிம் காங்கிரசுக்கு ஏற்படக்காரணமென்ன?

முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் பங்காளியாக இருப்பதை பெரும்பாலான முஸ்லிம்கள் விரும்பாமையா? அல்லது முஸ்லிம் காங்கிரசுக்கு அளிக்கும் வாக்கு யாவும் அரசுக்கு அளிக்கும் வாக்கைப் போன்று அமைகின்றது என்ற எண்ணப்பாடு தோன்றி காணப்படுகின்றதா? என்ற எண்ணம் முஸ்லிம் மக்கள் மத்தியில் மேலோங்கி காணப்படுகின்றதா? என்ற கேள்விக்கு மத்தியில் மக்கள் தங்களின் வாக்குகளை அளித்துள்ளார்களா? இதில் எது???

முஸ்லிம்களின் பள்ளிவாயில்கள் மீதான இனவாதிகளின் தாக்குதல் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது முஸ்லிம்களின் குரலாக இருந்து காத்திரமான நடவடிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளாமை, ஆளும் தரப்பில் இருந்தும் கூட அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, புதிய முகங்களுக்கு முக்கியத்துவமளிக்காமை, முஸ்லிம்களின் உரிமை விடயத்தில் மௌனித்து பேசுகின்றமை, கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றாமை, முஸ்லிம் காங்கிரசின் வட மாகாணத்தை சேர்ந்தவர்கள் இந்த தேர்தலில் கட்சி மாறியமை, கட்சியின் உள்ளக முறன்பாடுகள் தேர்தல் முடிந்த அப்பிரதேசங்களை எட்டிக்கூட பார்க்காமை போன்ற இன்னும் பல காரணங்களை முஸ்லிம் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக மு.காவின் போராளிகளுக்கு ஏற்படும் அநீதியைக் கூட மு.காவின் தலைமையும், அமைச்சுப் பொறுப்பிலிருக்கும் அமைச்சர்களும், அதன் உயர் பீட உறுப்பினர்களும் கவனம் எடுக்காமல் இருப்பதும் மு.காவின் போராளிகளுக்கு ஒரு கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளமையையும் கட்டாயம் சுட்டிக்காட்டியே ஆகவேண்டம். இவ்வாறு மு.காவும் அதன் தலைமையும் இருக்குமானால் எதிர்காலங்களில் ஒரு வீழ்ச்சிப் பாதையை நோக்கி செல்லுமே தவிர உயர் பாதையை நோக்கிச் செல்லாது என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமே இல்லை.

ஒரு தேசிய தலைவர் என்பவர் தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடத்தில் சென்று வாக்குகளை கேட்பது மட்டுமல்ல அவரின் கடமை மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் போது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது மாகாண சபை அமைச்சர், உறுப்பினர்களுக்கோ தீர்த்து கொடுக்கமுடியாமல் போகும் பிரச்சினைகளை தலைவருக்கு எடுத்துச் சொல்லும் நோக்குடன் தலைவரை தொடர்பு கொள்ளமுடியாமல் உள்ளதை என்னவென்று சொல்வது.

தலைவர் என்பவர் எந்த நேரமானாலும் அந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதும், மக்களுக்கு அன்றாடம் ஏற்படும் பிரச்சினை தொடர்பில் தீர்வினையும் பெற்றுக்கொடுப்பதும் அவரின் கடமையாகும். அந்த வகையில் மக்களின் பிரச்சினை பற்றி தலைவருக்கு எடுத்துக் கூறும் நோக்குடன் அவரின் தொலைபேசிக்கு தொடர்பை ஏற்படுத்தினால் அவர் பதில் கொடுப்பதில்லை. சில வேளைகளில் தொடர்பு ஏற்படுத்தப்பட்டால் அதில் ஒரு சிங்களம் பேசும் நபர் ஒருவரே பேசுவார், இந்த விடயம் மு.காவின் தலைவரிடத்தில் அன்றுதொட்டு இன்றுவரை அவரிடத்தில் உள்ளது.

இதுமாத்திரமல்ல மு.காவின் தலைவரின் நடத்தையை சில பாராளுமன்ற உறுப்பினர்களும் கையாண்டு வருகின்றனர். இந்த விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் சற்று மறுபட்டவராக உள்ளார். இந்த விடயம் தொடர்பில் பலர் அவரிடம் எடுத்துக் கூறியும் அதை கேட்பதாகவும் இல்லை. உதாரணமாக முன்னோர் சொல்வார்கள் ''முன் கோனினால் முற்றும் கோனும்'' என்பார்கள். முன்னோர் சொன்ன சொல் ஒரு காலமும் பொய்ப்பதில்லை என்பதற்கு மு.காவின் தலைவரின் செயல் ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

மேற்படி தலைவரின் செயலானது மு.காவின் வாக்குப்பலம் குறைந்து செல்வதற்கு ஒரு காரணமாகும் என்று கூட சொல்லலாம். அதே போன்று குறிப்பிட்ட சில மாவட்டங்களில் உள்ள முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் பிரதி நிதிகளுக்கும் மக்களுக்குமிடையில் எந்த தொடர்புகளும் இல்லாமையும் மற்றுமோர் காரணமாக அமைகின்றது என்றும் சொல்லலாம்.

மக்களுக்கு பிரச்சினைகள் வரும்போது அப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்கவேண்டும். அதைத்தான் தலைமை செய்யவேண்டும். அது அவ்வாறில்லாமல் மக்களின் பிரச்சினைகளை தலைவரிடம் எத்திவைக்கும் போது அதனை கேட்டுவிட்டு மக்கள் சொல்வதையும் அது தொடர்பில் கொடுக்கும் ஆவணங்களையும் அதே இடத்தில் விட்டுவிட்டு செல்வதல்ல தலைமை இதனைச் செய்வதையும் மாற்றியமைக்க வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு நாடளாவிய ரீதியில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் எதிர்காலத்தில் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதென்பது பாரிய ஒரு சவாலை சந்திக்கும் நிலைமை ஏற்படலாம் என்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

முஸ்லிம் காங்கிரசின் கொள்கைகள் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை தேர்தல் காலத்தில் மாத்திரம் பேசாமல் தேர்தல் இல்லாத காலங்களிலும் பேசுவதும் கட்சியின் தலைமைத்துவத்துக்குள்ள நற்பண்பாகும். இது அவ்வாறில்லாமையால் மு.காவின் முக்கியஸ்த்தர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கு பிரச்சினை வரும் போது அவற்றை சமாளிக்காமல் உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்காமல் கட்சியின் நடவடிக்கையினையும் கவனிக்காமல் இருப்பது தொடர்பிலும் கட்சி உயர் பீட உறுப்பினர்களுக்குள்ளும், முஸ்லிம் சமூகத்தின் புத்தி ஜீவிகள் மத்தியில் சுய விமர்சனமொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மு.காவின் தலைமை மாற்றியமைத்து நடந்து கொண்டால் எதிர்வரும் காலங்களில் மு.காவின் கட்சியையும் அதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளை அதிகரித்துச் செல்ல வாய்ப்புக்குள் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்பது உறுதி.

மீனோடைக்காட்டு
எம். பைசஷல் இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல் அத்துமீறல் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை புகார்

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்தியாவின் அத்து மீறலை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறையிட இலங்கை தீர்மானித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தயங்கும் பட்சத்திலேயே இலங்கை இவ்வாறு செயற்படும் என கடல் வள பிரதி அமைச்சர் தெரிவித்தார் . அண்மையில் இலங்கை வர உள்ள வெளி விவகார அமைச்சர் சல்மன் குஷ்த்திடம் தமிழக மீனவரின் அத்து மீறல் தொடர்பான உண்மை தடயங்களை வெளியிடப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் உண்மை தகவல் ஏற்கனவே இந்தியா இலங்கைக்கு தெரிந்த போதிலும் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு இவ் விடயத்தை பேசபோவதாக அமைச்சர் தெரிவித்தார் .

# the SUNDAY TIMES

## நகர விருத்தி ஒப்பந்தம் ஒன்றை பெற்றுள்ளது பாகிஸ்தான் கம்பனி.

பல மில்லியன் ரூபா பெறுமதியான நகர விருத்தி ஒப்பந்தம் ஒன்றை பாகிஸ்த்தான் கம்பனி பெற்றுள்ளது. கம்பனி விதியில் சுமார் 6 ஏக்கர் நிலத்தை இக் கம்பனி 99 வருட குத்தைகைக்கு பெற்றுள்ளது . அந்நிலத்தில் உல்லாசவிடுதி இரண்டு வீட்டுத்திட்டம் உள்ளடங்கலாக பாரிய அபிவிருத்தி திட்டம் மேற்கொள்ளபட உள்ளது. இவ் வீட்டுத்திட்டங்களை தொடருந்து சேவை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளதாக தெரிகிறது . அத்துடன் கொழும்பு அபிவிருத்தி திட்டத்திற்காக அங்கிருந்து அகற்றப்படும் மக்களும் இவ் வீட்டுத்திட்டத்தில் குடியிருத்தபடுவர் என தெரிகிறது .

## மன்னார் கடலில் சுற்றுலா பயணிகள் மூழ்கினர்

உள்ளூர் சுற்றுலா பயணிகளை ஏற்றி சென்ற படகு ஒன்றும் மீன்பிடி படகு ஒன்றும் மன்னார் கடலில் மூழ்கி உள்ளன.

இந்து சமுத்திரக் கடல் பிரதேசத்தில் அதிகரித்த காற்றாலும், கடல் சீற்றத்தாலும் இவ் இரு படகுகளும் மூழ்கி உள்ளதாக தெரிகிறது.

இவ் இரு விபத்துகளில் மொத்தமாக 5 பேர் காணமல் போய்யுள்ளனர்.

18 உல்லாச பயணிகளை ஏற்றி சென்ற படகானது முசலியில் தாண்டுள்ளது. இப் படகில் இருந்து 14 பேர் மீட்கப்பட்டுள்ளனர் .கடற்படை மாலுமி ஒருவரின் மனைவி, குழந்தை, மாமனார், மாமியார், மச்சாள் ஆகிய நால்வரும் கடலில் கணாமல் போயுள்ளனர். மீன்பிடி படகானது முள்ளிக்குளம் பகுதியில் தாண்டுள்ளது .அப் படகில் இருந்த ஒரு மீனவர் மீட்கப்படுள்ளார். மகன் காணமல் போயுள்ளார்.

## செய்திக்குறிப்பு

## நிர்வாகசேவை (SLAS) உத்தியோகத்தர்களின் ஒன்றுகூடல்

அகில இலங்கை நிர்வாக சேவைக்கு 1991ம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் தமக்கிடையேயொன ஓர் ஒன்றுகூடலை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

சுமார் 20 வருடங்களுக்கு மேல் நிர்வாக சேவையில் கடமையாற்றி நாட்டின் நிர்வாக இயந்திரத்தில் பிரதேச, மாவட்ட, மாகாண அமைச்சு மட்டங்களில் அரசின் கொள்கைகளை முன்னெடுத்தும், அமுலாக்கியும்வரும் முக்கிய பங்குதாரர்களான இவர்கள் முதற்தடவையாக இவ்வாறானதோர் ஒன்றுகூடலை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

எந்தக் கட்சி ஆட்சியில் இருப்பினும் கட்சி பேதங்களைக் கவனத்தில் எடுக்காமல் சேவையாற்ற வேண்டிய பொறுப்பு இவர்களையே சார்ந்தது.

இலங்கை நிர்வாக சேவையில் உயர் வகுப்பான விசேட வகுப்பில் கடமையாற்றும் இவர்களில் அனேகமானோர்அமைச்சுக்களின் செயலாளர்களாகவும்,மேலதிகச் செயலாளர்களாகவும்,பணிப்பாளர் நாயகங்களாகவும் உயர் பதவிகளிற் பணியாற்றுகின்றனர்.

இவ் ஒன்றுகூடல் நிகழ்வானது எதிாவரும் 19.10.2013ம் திகதி காலை 10 மணிக்கு "டம்பே விலேஜ் ஹோட்டல்" பிலயந்தலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் விரும்பினால் தமது குடும்பத்தினருடன் கலந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

# SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

## ஐக்கிய தேசிய கட்சியின் பிரதான மாற்றங்கள்

கடந்த மாகாண சபைப் தேர்தலில் ஏற்ப்பட்ட கடும் பின்னடைவை அடுத்து கட்சி மறுசீரமைப்பு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவென அனைத்து முக்கிய அங்கத்தவர்களையும் ஒன்றிணைக்கும் முயற்யில் ஆக்கிய பிக்குகள் முன்னணி ஈடுபட்டுள்ளது.

மகாசங்கத்தனரால் முன்மொழியப்பட்டுள்ள ஐக்கி தேசியக் கட்சியிக்கான தலைமைத்துவ குழு தொடர்பாக ரணில் விக்ரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## 2014ம் ஆண்டில் இருந்து திரிபோசா விசுக்கோத்து

மாணவர்களுக்கு திரிபோசா விசுக்கோத்துகளை 2014ம் ஆண்டில் இருந்து வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்னர் 60 வீத இயலளவில் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிய லங்கா திரிபோச கம்பனி தற்போது 90 வீத இயலளவில் இயங்கும் நிலையில் உள்ளது. இவ்வாறு இயலளவு அதிகரிப்பதற்க்கு சுமார் 150 மில்லியன் செலவில் புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது.

## உயர்ந்த புள்ளி இல்லை — தந்தையால் அடி, உதை.

கடந்த புலமைப் பரீட்சையில் வெற்றிப் புள்ளியினை கடக்காத மாணவனை தகப்பனார் கடுமையாகத் தாக்கி நெருப்புச்சூடுவைத்த சம்பவம் பொஹவந்தலாவையில் நடந்துள்ளது. லயன் அறையில் வசிக்கும் மாணவனே இவ்வாறு முகத்திலும் கையிலும் நெருப்புச் சூட்டுக்கு உள்ளாகியுள்ளார் மாணவன் வைத்திய சாலையிலும் தகப்பனார் சிறையிலும் தற்போது உள்ளனர்.

## சியராலியோன், பொட்ஸ்வாணாவுடன் உறவு நெருங்குகிறது

நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரின் போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பொட்ஸ்வானா மற்றும் சியாராலியோன் அமைச்சர்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு அந்நாடுகளுடன் வெளிநாட்டுறவை வளர்த்துள்ளார்.

## அக்டோபர் 27 ல் கட்டுநாயக்காவிற்கான அதிவேக பாதை

கட்டுநாயக்காவில் இருந்து கொழும்பிற்கான அதிவேக பாதையை எதிர்வரும் 27ம் திகதி சனாதிபதி திறந்துவைக்கவுள்ளார் கடல்மண் சேர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள முதலாவது அதிவேக பாதையாக அப்பாதை அமைந்துள்ளது. சுமார் 25.8 கி.மீற்றர் நீளமான இவ் அதிவேகப்பாதைப் பயணத்தின் ஊடாக சுமார் 20 நிமிடங்களை மீதப்படுத்திக் கொள்ள முடியும்.

# The Sunday LEADER

## இலங்கையும் இந்தியாவும் கையெழுத்திடவுள்ள இரண்டு உடன்பாடுகள்.

சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான இரண்டு உடன்படிக்கைகளில் இந்தியா இலங்கையுடன் ஒப்பமிடவுள்ளது. இவ் உடன் படிக்கைகளில் இலங்கை மற்றும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர்கள் ஒப்பமிடவுள்ளனர் உடன்படிக்கை அமைந்திருப்பதாக வெளியுறவுத்துறைச் செயலாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

## மக்கா பயணத்தில் மேலதிக கட்டணம்

அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலதிகமாக வசூலித்து மக்காவிற்கு யாத்திரீகர்களை அனுப்பிய முகவர்கள் யார்? யார்? என அரசு விசாரணையை முடுக்கி விட்டுள்ளது. அரசு மக்கா பயணத்திற்காக 350,000 ரூபா தொடக்கம் 400,000 ரூபாய்களையே கட்டணமாக அறவிடவேண்டும் என விதித்திருந்தது. எனினும் சில முகவர்கள் இவ் எல்லையைத் தாண்டி மிக அதிகமான கட்டணங்களை அறவிட்டு பயணிகளை அனுப்பியிருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் 6300 பயணிகளுக்கான அனுமதியை கோட்டாவாகப் பெற்ற இலங்கைக்கு இவ்வருடம் 2240 பயணிகளுக்கான கோட்டாவே கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பத்து மில்லியன் செயவில் கண்காட்சி

பொதுநலவாய மாநாட்டின் போது வருகை தருபவர்களைக் கவரும் நோக்குடன் நவம்பர் மாதம் 15 - 17 வரை கிங்ஸ்பறி விடுதியில் 10 மில்லியன் செலவில் இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி யொன்றை இலங்கை இரத்தினக்கல் ஆபரணக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்துள்ளது. இச் செலவை அக் கூட்டுத்தாபன ஊழியர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். தமக்கு நிதி இல்லாததால் வருடாந்த மிகையூதியமாக (போனஸ்) 7500 ரூபாவை விட மேலதிகமாகச் செலுத்த முடியாது என மறுத்திருந்த கூட்டுத்தாபனத்திற்கு எங்கிருந்து இவ்வளவு நிதி தற்போது கிடைத்துள்ளது என அதன் ஊழியர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர். அத்துடன் வருகைதரவுள்ள அரச தலைவர்களின் வாழ்க்கைத் துணைக்கு பெருஞ்செலவில் நினைவுப் பரிசில்களை வழங்கவும் நடவடிக்கையையும் ஊழியர்கள் எதிர்த்துள்ளனர்.



## ரணில் பதவி விலகுவார்?

மற்றொரு சிறந்த தலைவர் ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கிடைப்பாராயின் ரணில் தமது பதவியை இழக்கத் தயாராக இருக்கிறார் என ஐ.தே.க வின் தேசிய அமைப்பாளர் தயாசிறி தெரிவித்துள்ளார்.

அவ்வாறே தானும், அப்பதவிக்குப் பொருத்தமானவர் இல்லை எனில், தமது பதவியிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

கட்சியின் தோல்விகளுக்கு ரணில் விக்ரமசிங்க மட்டுமே பொறுப்பேற்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரத்துபஸ்வல மக்களுக்கு தீர்வு இல்லை.

நஞ்சாடும் தமது குடிநீர்ப்பிரச்சனைக்குப் போராடி பல உயிர்களை இழந்தும் ரத்துபஸ்வல மக்களுக்குத் தற்போதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை. அதற்காக மீண்டும் மக்கள் போராட்டத்தில் குதிக்கத்தயாரகி வருகின்றனர் அதை அடுத்து கடந்த வெள்ளிக் கிழமை காவல்துறையுடன் அப்பிரதேச மக்களின் தலைவர்கள் உட்பட பிரதேச விஹாரையின் பிக்கு கூட்டமொன்றை நடாத்திச் சில கோரிக்கைகளை முன்வைத்திருப்பதாக தெரிகினறது. அதன்படி கையுறைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் எவரையும் வேலை செய்யவிடப்போவதில்லை என அம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 10

01. மனிதனின் தினசரி வாழ்வுக்குத் தேவையான பல உபகரணங்கள் இன்று மின்சாரத்தினால் செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய உபகரணங்களில் மின்னழுத்தியும் ஒன்றாகும்.

1. வெப்பமாக்கப்படும் மின் சாதனத்துக்கும் (மின்னழுத்தி தவிர) வெப்பமாக்கப்படாத வேறு மின் சாதனத்துக்கும் ஒவ்வொரு உதாரணத்தை முறையே எழுதுக.

2. ஒவ்வோர் அழுத்தியும் முன்னால் கூரான வடிவம் கிடைக்கத்தக்கதாகச் செய்து முடிக்கப்பட்டிருக்கும். துணியை அழுத்துவதற்கு அவ்வடிவம் உகந்ததாக இருப்பதற்கான ஒரு காரணத்தை தருக.

3. மின்னழுத்தியினால் துணியை அழுத்தும் போது இறப்பர்ச் செருப்பை அணிந்திருத்தல் அல்லது இறப்பர் விரிப்பின் மீது நிற்றல் பொதுவாகப் பின்பற்றப்படும் வழக்கமாகும். இதன் விஞ்ஞான முக்கியத்துவத்தை விளக்குக.

4. வெப்பமாகிய அழுத்தி போன்ற யாதாயினும் ஒன்றில் கைபட்டால் கணப்பொழுதில் கை அப்பால் வீசப்படும். அறியாமலே நடைபெறும் இத்தகைய தூண்டற்பேறுக்கு வழங்கும் பெயர் யாது?

02. இனப்பெருக்கம் அங்கிகளின் நிலவுகைக்கு இன்றியமையாத ஒரு செயன்முறையாகும். பூக்குந் தாவரங்களில் நடைபெறும் இனப்பெருக்கத்தை இலிங்கமுறை இனப்பெருக்கம், இலிங்கமில் முறை இனப்பெருக்கம் என இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. "இனப்பெருக்கம்" என்பதன் கருத்தை விளக்குக.

2. விவசாயப் பயிர்ச்செய்கைக்காக நாற்றுகளைப் பெறும் செயன்முறையில் இலிங்கமுறை இனப்பெருக்கத்திலும் பார்க்க இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

3. இலிங்கமில் முறை இனப்பெருக்க முறையாகிய நிலக்கீழ்த் தண்டுகளின் மூலம் நடைபெறும் இனப்பெருக்கத்திற்கு ஓர் உதாரணம் தருக. இனப்பெருக்கச் செயன்முறை தவிர தாவரங்களின் நிலவுகைக்கு நிலக்கீழ்த் தண்டுகள் உதவும் விதத்தை விளக்குக.

இழைய வளர்ப்பு பதியப் பகுதிகளைப் பயன்படுத்தி நடைபெறும் செயற்கைத் தாவர இனப்பெருக்கத்திற்கு ஓர் உதாரணமாகும்.

1. இழைய வளர்ப்புக்குக் கிருமியழித்த ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

2. இழைய வளர்ப்பு ஊடகத்தில் அடங்கும் ஒரு கூறு நீராகும். இதற்கு மேலதிகமாக அதில் அடங்கவேண்டிய வேறு இரு கூறுகளைக் குறிப்பிடுக.

இலிங்முறை இனப்பெருக்கத்திற்காக அமைந்துள்ள விசேட கட்டமைப்புக்களாகப் பூக்கள் இருக்கும் அதேவேளை, இலிங்க முறையும் நடைபெறுகின்றது. மகரந்தச் சேர்க்கை இலிங்கச் செயன்முறையின் ஒரு முக்கிய படிமுறையாகும்.

1. மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.

2. தன்மகரந்தச் சேர்க்கையைத் தடுப்பதற்குப் பூக்களில் காணத்தக்க ஓர் இசைவாக்கத்தை உதாரணத்துடன் குறிப்பிடுக.

3. கொடித்தோடைத் தாவரத்தில் பூக்களைச் செயற்கையாக மகரந்தச் சேர்க்கை நடைபெறச் செய்யும் பணி உம்மிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனைச் செய்யும் விதத்தை எழுதுக.

03.
1. பாகுபாட்டை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை எவை?

2. மனித உயிரியல் தொடர்பாக இடைவெளிகளை நிரப்புக.

| | |
|---|---|
| இராட்சியம் | கணம் |
| வகுப்பு | வருணம் |
| குடும்பம் | சாதி |
| இனம் | |

3. இரு சொற் பெயரீட்டு முறை என்றால் என்ன?
4. இரு சொற் பெயரீட்டில் அங்கி ஒன்றில் எவை குறிப்பிடப்படும்?
5. விலங்கு இராட்சியத்தில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட அங்கிகள் காணப்படும் கூட்டம் எது?
6. கணம் மொலஸ்காவின் சிறப்பியல்புகள் இரண்டு தருக.
7. கணம் ஆத்திரப்போடாவின் சிறப்பியல்புகள் இரண்டு தருக.
8. வகுப்பு மமேலியாவுக்குரிய சிறப்பியல்புகள் இரண்டு தருக.

### பாடம் - கணிதம், 10

பகுதி 02

01. பொறி ஒன்றை கைக்காசுக்கு விற்கும் போது விலை 90000 ஆகும். அதனை வாடகைக் கொள்வனவு முறையில் பெறுவதாயின் முதலில் பொறியின் விலையின் அரைவாசியை செலுத்தியும் மீதியை 4250 வீதம் 24 மாதம் தவணைகளில் செலுத்தியும் வாங்கலாம். இதன்படி,
   1. தவணை முறையில் செலுத்துவதற்கு எஞ்சிய கடன் பணம் யாது?
   2. 24 மாதத் தவணைகளிலும் செலுத்தும் மொத்தப்பணம் யாது?
   3. செலுத்தப்படும் மொத்த வட்டி யாது?
   4. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   5. ஒரு மாத அலகு வட்டி யாது?
   6. வட்டியின்றி ஒரு தவணைப்பணம் எவ்வளவு?
   7. செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் யாது?

02. மோட்டார் வண்டி ஒன்று $150Km$ தூரத்தை மாறாக்கதி $VKmh^{-1}$ செல்கின்றது. கதி மணித்தியாலத்திற்கு $20Km$ ஆல் குறைந்தால், அப்பிரயாண நேரம் 2 மணித்தியாலத்தினால் அதிகரிக்கின்றது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி இருபடிச் சமன்பாடு ஒன்றை உருவாக்கி புகை வண்டியின் மாறாக் கதியைக் காண்க.

03. சார்பு $Y = 4+5x-x^2$ இன் வரைபை வரைவதற்குப் பொருத்தமான அட்டவணையை தயாரிக்குக. $x$ இற்கான பெறுமானங்களாக -1, 0 , 1 , 2, 2.5, 3, 4, 5 என்பவற்றைப் பயன்படுத்துக.

அச்சுவழியே 10 சிறுபிரிவுகள் ஒரு அலகாகவும் அச்சு வழியே 10 சிறுபிரிவுகளாகவும் இரு அலகுகளும் வகை குறிக்குமாறு அளவுத்திட்டத்தை எடுத்து பூரணப்படுத்தப்பட்ட அட்டவணையின் பெறுமானங்களைப் பயன்படுத்தி மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.
   1. சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
   2. சார்பின் உயர்வுப் பெறுமானத்தை எழுதுக.
   3. சார்பு நேராகவுள்ள ன் பெறுமான வீச்சை எழுதுக.
   4. எனும் சமன்பாட்டின் மூலங்களை பொருத்தமான ஏகபரிமான வரைபொன்று வரைவதன். மூலம் காண்க.

04.
1. பெருக்கல் விருத்தி ஒன்றின் முதல் மூன்று உறுப்புக்களின் கூட்டுத்தொகை 26உம் முதல் உறுப்பு 2உம் ஆகும். முதலுறுப்பு 2ஐ உடைய இரு விருத்திகள் உண்டெனக் காட்டி அவ்விருத்திகள் இரண்டையும் எழுதுக.

2. கூட்டல் விருத்தியொன்றின் 3ம் உறுப்பு 18உம், 9ம் உறுப்பு 42உம் ஆகும். இவ்விருத்தியின் முதலுறுப்பு பொதுவித்தியாசம் என்பவற்றைக் காண்க.

$3+4x-x^2$

3. இக் கூட்டல் விருத்தி ஒன்றின் ஆம் உறுப்பினதும் 10 ஆம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 7 ஆம் உறுப்பின் இரு மடங்காகும் எனக் காட்டுக.

05. எண்ணெய்த் தாங்கியொன்றின் குழாயின் ஊடாக வெளியேறும் எண்ணெயை சேமிப்பதற்காக ஒரு பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. அப் பாத்திரத்தின் ஆரம்பத்தில் எண்ணெய் $1ml$ காணப்பட்டது.

துவாரத்தின் ஊடாக முதலாவது நிமிடத்தில் சிந்திய எண்ணெயின் அளவை விட இருமடங்கு 2 ஆவது நிமிடத்திலும், 2 ஆவது நிமிடத்தில் சிந்தியதை விட இரு மடங்கு மூன்றாவது நிமிடத்திலும் என்றவாறு முன்னைய நிமிடத்தை விட இரு மடங்கு எண்ணெயை அடுத்த நிமிடத்தில் சிந்துகின்றது.

சிந்துகின்ற எண்ணெயை சேமிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பாத்திரம் 13 நிமிடங்களில் நிறைந்தது.

1. முதலாவது நிமிடத்தில் சிந்துகின்ற எண்ணெயின் அளவு $1ml$ எனக் கொண்டு முதல் 3 நிமிடங்களில் சிந்துகின்ற எண்ணெயின் அளவுகளைத் தருக.
2. 13வது நிமிடத்தில் சிந்துகின்ற எண்ணெயின் அளவு யாது?
3. சேமிப்பதற்காக வைக்கப்பட்ட பாத்திரத்தின் கொள்ளளவு யாது?
4. எத்தனையாவது நிமிடத்தில் பாத்திரத்தின் கால் பங்கு எண்ணெயால் நிரம்பும்?

06. மாணவரொருவரின் கல்விக்கு மாதாந்தம் ரூபா 800 தேவை
   1. கல்விக்கான மாதாந்த தொகையை பெறுவதற்கு எவ்வளவு பணத்தை ஆண்டுக்கு $15\%$ என்ற எளிய வட்டிக்குக் கொடுத்தல் வேண்டும்?

   2. மேலே வட்டிக்கு கொடுத்த பணத்தை $20\%$ பங்குலாபம் வழங்கும் கம்பனியின் ரூபா 10 பங்குகளை ரூபா 16 படி வாங்குவதற்கு முதலிட்டால் மாணவனின் மாதாந்த கல்விச் செலவை பங்குலாபத்தினூடு செலுத்த முடியுமா? காரணம் தருக?

07.
1. தீர்க்குக. $9^{x+1} = 243$
2. தீர்க்குக. $2x+6y=8$ , $5x-3y=14$
3. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.

$$\frac{(7.324)^2 \times \sqrt{27.46}}{\sqrt[3]{43.42}}$$

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்

குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி 11* பாடம் - வரலாறு

**வினா 01**

01. நாடுகாண் பயணத்தை ஊக்குவித்த பின்வரும் நாட்டுத்தலைவர்களை யுஜஊ ஒழுங்கில் தருக.
அ - ஸ்பானியா ஆ - போர்த்துக்கல் இ - இங்கிலாந்து

02. மறுமலர்ச்சிக்காலத்தில் பின்வரும் கலைப்படைப்புக்குரிய கலைஞர்களை அ, ஆ, இ, ஈ என்ற ஒழுங்கில் தருக.
அ - இறுதி இராப்போசனம் ஆ - எதென்ஸ் பாடசாலை
இ - இறுதித்தீர்ப்பு ஈ - பீட்டா சிலை

03. நாடுகாண் பயணம் ஏற்படுவதற்கு தூண்டுதலாக அமைந்த காரணிகள் இரண்டை விபரிக்குக.

04. நாடுகாண் பயணத்தால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றை சுருக்கமாக விளக்குக.

**வினா 02**

01. அ - சர்வதேச சங்கத்தை தோற்றுவித்தல்
ஆ - ஐக்கிய நாடுகள் சபையில் முதல் செயலாளர் நாயகமாதல்
இ - அணிசேரா நாடுகள் உருவாக்கத்தில் பஞ்சசீல கொள்கையை முன்வைத்தல்
மேற்படி அ, ஆ, இ என தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய நபர்களைத் தருக

02. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியால் ஏற்பட்ட சர்வதேச விளைவுகள் இரண்டை குறிப்பிடுக.

03. கெடுபிடி போர்க்காலத்தில் ர்'யாவும் ஐக்கிய அமெரிக்காவும் தமது கொள்கையை பாதுகாத்து பரப்ப உருவாக்கிய அமைப்பினை குறிப்பிட்டு விளக்குக.

04. கெடுபிடி போரின் பின் உலக சமாதானத்துக்கு ஐக்கியநாடுகள் சபை ஆற்றும் பணிகள் மூன்றை குறிப்பிட்டு விபரிக்குக.

**வினா 03**

அ. பகுதி (1) இன் கீழ்தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களை இலங்கைப்படத்திலும் (2) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.
1. திஸ்ஸவாவி, மகாவலிகங்கை, கல்யாணி, ரிதிபெந்திஅணை, விஜிதபுர, நந்திக்கடல், சேருவில, குதிரைமலை, ஆணையிறவு, இரணைமடு
2. இஸ்தான்புல், அல்சேல்ஸ் - லொறைன், கீல்கால்வாய், மும்பாய், மியன்மார், டோக்கியோ, நியூயோர்க், கியூபா

ஆ. கீழே அ, ஆ, இ, ஈ ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்களை முறையே அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
அ – கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்கு தப்ரபேன் என பெயரிட்ட கிரேக்கர்
ஆ – கி.பி 1344ல் இலங்கை வந்த அரேபிய தேச சஞ்சாரி
இ – கலிங்கமகானிடம் இருந்து நாட்டை மீட்டல்
ஈ - இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரை விரட்ட ஒல்லாந்தரை அழைத்தல்
(மெகஸ்தனிஸ் , தொலமி , மார்க்கோ போலோ , இப்னுபதூதா , 1ம் பராக்கிரமபாகு , 2ம் பராக்கிரமபாகு, 2ம் இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன்)

**வினா 04**

இலங்கையின் வரலாற்றை பற்றி அறிவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு மூலாதாரங்கள் எமக்கு பெரும் துணை புரிகின்றன.

i. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் வெளிநாட்டு மூலாதாரங்களை எழுதியோரை யுஇஉஇஊ ஒழுங்கில் குறிப்பிடுக.
அ – நெச்சுரலில் ஹிஸ்ரோறியா ஆ - இந்திக்கா
இ – புவியியல் சாஸ்திர பிரவேசம்
(மெகஸ்தனிஸ் , பிளினி, கொஸ்மஸ் , தொலமி , பாகியன்)

ii. நாணய மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் அம்சங்கள் இரண்டை குறிப்பிடுக.

iii. இலங்கையில் துட்டகைமுனுவின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.

iv. இலங்கையில் நீண்ட காலம் நிலைத்திருந்த அனுராதபுர இராசதானி வீழ்ச்சி அடைய காரணமாக அமைந்த விடயங்கள் மூன்றை விளக்குக.

*ஆசிரியர் :*
**த.அகிலன்,** Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறு பைக்கட்டினுள் காணப்படும் பதார்த்தம் எது?
1. சிலிக்கா ஜெல் 2. நீராவி உறிஞ்சி 3. சுண்ணாம்பு
2. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. இறுங்கு 3. அரசு
3. வீட்டுத் தோட்டமொன்றில் ஒரு பயிரை நடுதல் தொடர்பான தகவல்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன.
அ. தினமும் பாத்திகளுக்கு நீரூற்றல்
ஆ. நிலத்தை உழுது பண்படுத்தல்
இ. வித்துக்கள் முளைத்து நன்றாக வளருதல்
ஈ. பாத்திகளை தயார்படுத்தல்.
உ. வித்துக்களை பாத்திகளில் நடுதல்
இதனை ஒழுங்கு வரிசைப்படி காட்டுவது எது?
1. ஆ,ஈ,இ,அ,உ 2. ஆ,ஈ,உ,அ,இ 3. ஈ,ஆ,இ,உ,அ
4. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி
5. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை 2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை
6. நீரில் மிதக்கக்கூடிய பொருள் எது?
1. தக்கை 2. சீனி 3. உப்பு
7. பின்வரும் வாக்கியங்களை கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்திக் கூறுவது?
அ. அப்பா பரிசு வாங்கித் தந்தார்.
ஆ. பரீட்சைக்குத் தோற்றினேன்.
இ. விடாமுயற்சி வெற்றி தரும் என ஆசிரியர்கள் பாராட்டினர்.
ஈ. மிகவும் கடினமாகப் படித்தேன்.
உ. பரீட்சையில் அதியுயர் சித்தியெய்தினேன்.
1. அஇஉஈஆ 2. ஈஆஉஅஆ 3. ஈஆஉஆஅ
8. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்
9. 19 3 8 15 15 12 எனும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய ஆங்கிலச் சொல் எது?
1. school 2. spoon 3. front
10. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
1. 300மீ, 900மீ 2. 600மீ, 900மீ 3. 900மீ, 600மீ
11. "மாம்பட்டை மருதம்பட்டை வெளவாலோடிய தென்னம் பட்டை......" என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
1. சடுகுடு 2. கிட்டிப்புள் 3. கபடி
12. ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
1. கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
2. கைமருந்தை காயத்தின் மீது பூசுதல்
3. கொடுக்கை அகற்றிய பின் கைமருந்தை பூசுதல்
13. இலக்கம் 2, இலக்கம் 4 எழுதப்பட்ட எண் அட்டைகள் ஒரு பெட்டியினுள் இருந்தன. எண் அட்டைகளிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை 36 ஆகும். எண் அட்டைகளை எண்ணிய போது 12 இருந்தன. இதில் இலக்கம் 2, இலக்கம் 4 கொண்ட அட்டைகளின் எண்ணிக்கைகள் முறையே
1. 5, 7 2. 7, 5 3. 6, 6
14. 2000 ஆம் ஆண்டு லீப் வருடமாகும். 2001ம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி திங்கட்கிழமை எனில், 2009 ஆம் ஆண்டின் டிசம்பர் 31ந் திகதி என்ன கிழமையாகவிருக்கும்?
1. வியாழன் 2. செவ்வாய் 3. புதன்
15. பிற்பகல் இரண்டு கழிந்து ஐம்பத்தொரு நிமிடம் என்பதை சரியாக நியமவடிவில் குறிப்பது எது?
1. 14:51 2. 14.51 3. 02:51

பெயர்: ..............................................
..............................................
முகவரி: ..............................................
..............................................
..............................................
பாடசாலை: ..............................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்களின் பெருமை

(தொடர்ச்சி)

மதீனா முனவ்வராவிற்கு நாங்கள் வந்த பிறகுதான் பெண்களை நாங்கள் கௌரவப்படுத்தினோம் என்றும் மேலும் பெண்களைப் பற்றி குர்ஆன் ஆயத்துக்கள் வஹீயின் மூலம் அறிவிக்கப்பட்ட பிறகு நாங்கள் பெண்களுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்து விட்டோம் என்றும் உமர்(ரலி) அவர்கள் அறிவித்ததாக ஸஹீஹ் புகாரி என்ற கிரந்தத்தில் காணப்படுகின்றது. மேலும் குர்ஆனில் ' அன்னிஸா' அதாவது ' பெண்' என்ற ஓர் அத்தியாயத்தையே அல்லாஹ் நமக்கு அறிமுகப்படுத்துகிறான் என்றால் பெண்கள் எத்தகைய அந்தஸ்து உடையவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால் பெண்கள் உண்மையான தீனுடைய பெண்களுக்காக வாழவேண்டும் ஆனால் தற்போது கேவலமான வாழ்க்கையைக் கடைப்பிடித்து அவர்களின் மதிப்பை இழந்து விடுவார்கள்.

**பெண்களிடம் உள்ள சிறந்த அம்சங்கள்**

☞ பெண்கள் மென்மையானவர்கள், பூவைப் போன்றவர்கள்.

☞ ஆண்களை விட பெண்கள் இறை பக்தியில் சிறந்தவர்கள்.

☞ அன்பு காட்டுவதிலே, பரிவு காட்டுவதிலே முதன்மையானவர்கள் பெண்கள்.

☞ பணிவிடை செய்வதில் சிறந்தவர்கள் பெண்கள்.

☞ பொறுப்புணர்ச்சி மிக்கவர்கள் பெண்கள்.

☞ சகிப்புத் தன்மையிலே உஹது மலையினும் மிஞ்சியவர்கள் பெண்கள்.

☞ வெட்கம், அடக்கம் நிறைந்தவர்கள் பெண்கள்.

☞ எதையும் தாங்கள் நினைத்தால் முடித்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் பெண்கள். பெண்கள் மிருதுவானவர்கள் கூடிய சீக்கிரத்தில் மயங்கி விடக்கூடியவர்கள் மலர்களை விடவும் மென்மையானவர்கள், மிருதுவான மனங்களைக் கொண்டவர்கள். எனவே பெண்கள் மார்க்க அறிவை விளங்கிக் கொண்டால் எப்போதுமே மனதை திடப்படுத்திக் கொண்டு பேணுதலாக இருப்பார்கள் எனவேதான்.

'' ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே '' என்று சொல்லப்படுகின்றது.

எனவே பெண்களின் மூலமாகத்தான் சந்ததிகள் ஏற்படுகின்றன. ஆகவே பெண்களிடம் எந்த குணம் இருக்குமோ அந்தக் குணம்தான் அவர்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகளுக்கும் அமையும் தாயின் மடிதான் குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளி எனவே ஒரு பெண்ணுக்கு தீனை விளற்கச் செய்தால் ஒரு குடும்பமே தீனின் மீது உண்டாகிவிடும். பெண்களை மதிக்கச் செய்வதற்கு மிகமுக்கியமாக இருப்பது மதப்பற்றும் இழுக்கும், நற்குணங்களும் தான். மாட்சியைக்குரிய எல்லாம் வல்ல இல்லாஹ் பெண் சமுதாயத்திற்கு ஹிதாயத் என்னும் நேர்வழியை அளிப்பானக! ஆமீன்........

**நாளும் ஒரு நபி மொழி**

"ஆண் மகனான குடும்பத்தலைவனும் தன்குடும்பப் பொறுப்பாளியே. அவன் தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி விசாரிக்கப்படுவான். பெண்(மனைவி) தன் கணவரது வீட்டிற்குப் பொறுப்பாளி ஆவாள். அவளுடைய பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள்." (அறிவிப்பவர் இப்னு உமர் ரழி நூல் புஹாரி - 893)

# பெண்மணிக்காக .....

(தொடர்கிறது)

தொழாமல் இருப்பதற்கு இஸ்லாத்தில் எந்த அனுமதியும் கிடையாது. நின்று தொழமுடியவில்லை என்றால் இருந்து தொழுங்கள் அதற்கும் முடியாவிட்டால் படுத்தநிலையில் தொழுங்கள் அதுவும் முடியவில்லை என்றால் மனதால் தொழுது கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் தொழுகையை விடுவதற்கு இஸ்லாத்தில் எந்த அனுமதியும் கிடையாதென்று. தொழாதவர்களைக் கண்டித்தும் ஏராளமான கதீஸ்கள் வந்துள்ளன.

ஒரு வீட்டில் மனைவி தொழுகையாளியாக இருந்து கணவன் தொழாமல் இருந்தால் நிச்சயமாக அந்த பெண்ணால் கணவனை தொழுகையாளியாக மாற்ற முடியும். அதற்கு மாற்றாக மனைவி தொழாதவளாக இருந்தால் வீட்டில் உள்ள குழந்தைகள் கூட தொழமாட்டார்கள். தன் தாயுடனான தொடர்பு குழந்தைகளுக்கு அதிதமாக இருப்பதால் தாய் செய்வதையே குழந்தைகளும் பின்பற்றுவார்கள். எனவேதான் ஒவ்வொரு பெண்களும் தொழுகையை விடாமல் இறையச்சத்துடன் தொழுது வர வேண்டும். பிராயணம் செய்பவர்கள் கூட தொழுகையை விடக்கூடாது என்பதற்காக கஸ்ர், ஜம்வு செய்யலாம் என்று இலகு படுத்தி உள்ளது இஸ்லாம். அவ்வாறென்றால் தொழுகையை எப்படி நாம் விடமுடியும்.

## திருடர்களில் பெரும் திருடன்

நபியே! தொழுகையை நிலை நிறுத்துவீராக ஏனெனில் நிச்சயமாக தொழுகை மானக்கேடான தீயசெயல்களைவிட்டு தடுக்கின்றது. ( 29:45) என்று அல்குர்ஆன் கூறுகின்றது. நம்முடைய தொழுகை நாம் செய்யும் தீய செயல்களை தடுக்கின்றதா? அல்லாஹ் என்னை பார்கின்றான் என்ற இறையச்சத்துடன் தான் தொழுகின்றோமோ? அல்லது என்னை மற்றவர்கள் பார்க்கின்றார்கள் என்று தொழுகின்றோமா? சிந்தித்து பாருங்கள் சகோதரிகளே! நாம் இறையச்சத்துடன் தொழுதால்தானே நாம் செய்யும் தீய செயல்களை விட்டு நம்மை தடுக்கமுடியும். அதேபோல் தொழுகையை நிறைவேற்றியதற்குரிய நன்மை கிடைக்கும் இல்லாவிட்டால் மறுமையில் பழைய துணியை சுருட்டி வீசுவதுபோல தொழுகை நம்முடைய முகத்தில் வீசப்படுமே அதேபோல் தகுந்த காரணமின்றி தொழுகையை களவாக்க முடியாது. மறதி, தூக்கம் இவ்விரண்டையும் தவிர.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் திருடர்களுக்கெல்லாம் பெரும் திருடன் தொழுகைத்திருடன் என்று கூறினார்கள். நபி(ஸல்) அவர்களின் திரு முகத்தை ஏறிட்டு நோக்கினார்கள் தோழர்கள். "தொழுகையை எப்படி திருடமுடியும்?" என்ற வினாவையே உணர்த்தின அவர்களின் பார்வைகள் " தூதர் ஸல் அவர்களே! சற்று எங்களுக்கு விழங்கச் சொய்வீர்களானால் அது தங்களின் கிருபையாக இருக்கும்" எனத் தோழர்கள் கூறினர். அவன்தான் "ருக்கூ"வையும் சரிவர செய்வதில்லை, ஹுஜீதையும் தான் என பொருமானார் ஸல் அவர்கள் விளக்கினார்கள். நபி (ஸல்) அவர்களின் இந்த எச்சரிக்கை " தொழுகிறேன் பேர்வழிஎன்று தொழும் இடத்திற்கு வந்து தக்பீரும் கட்டி, தங்களின் உடலை மட்டும் தொழும் இடத்தில் நிறுத்தி, உள்ளத்தை உலாசுற்ற அனுப்பி விடுகிறார்களே அந்த பரிதாபத்திற்கு குரியவர்களைப் பற்றியே! எத்தனையோ பிரச்சனைகள் எவ்வளவோ அவசரங்கள் அத்தனை எண்ண அலைகளுக்கு நடுவேயும் மின்னலைப்போல குனிந்து எழும் அவர்களின் அதிவிரைவன ஹுஜீதுகள், துரிதமான தஸ்மீஹ்கள் படபடவென எதுகள் அடிபட அவர்கள் ஓதும் பரபரப்பான கிராஅத்துக்கள் யாவும் முடிவில் அவர்களை ஏமாற்றமடையவே செய்யும்.

முற்றும்.

# ஆயுளை நீடிக்கும் தினசரியை

நமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சில கடமைகளைத்தான் ஆயுர்வேத மகரிஷிகள் "தினரியை" என்று நிர்ணயித்துள்ளனர். அவை:

**அதிகாலையில் கண் விழித்தல்**

ஆரோக்கியமானவர்கள் தம் ஆயுளைக் காக்கும் பொருட்டு அதிகாலையில் சூரியன் உதிக்கும் முன் கண் விழிக்க வேண்டும்.

பிரம்ம முகூர்த்தம் எனப்படும் 3 முதல் 5 மணிக்குள் எழுந்து கொள்வது நல்லது. இதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. அந்த வேளையில்தான் உடலில் வாயு பலமாக இயங்கும். அப்பொழுது அபான வாயு நன்றாகச் செயல்பட்டு மலம்,



சிறுநீர் இரண்டையும் எளிதாக வெளியேற்றும்.

எனவே, கண் விழித்தவுடன் முதல் வேலையாக வயிற்றின் ஜீரண நிலையைக் கணித்துக்கொள்ள வேண்டும். அதாவது நாம் இரவு சாப்பிட்ட உணவானது சரிவர ஜீரணத்தை அடைந்துள்ளதா இல்லையா என்பதை அறிய வேண்டும். அதன்பின் மலம் கழிக்க வேண்டும்.

நாம் மிகவும் கால தாமதமாகக் கண் விழித்தால் மலம் கழிப்பதற்குச் சரியான நேரம் தவறிவிடும். மலத்தை வலக்கட்டாயமாக முயற்சி செய்து வெளியேற்றுவது சரியல்ல.

**பல் துலக்குதல்**

இன்றைக்குக் கிராமப்புறங்களில் வேம்பு, ஆல், கருங்காலி, புங்கை, கருவேலம் மருது போன்ற கசப்பு, காரம் துவர்ப்புச் சுவைகளைக் கொண்ட மரம், செடிகளின் குச்சிகள் அல்லது வேர்களையோ வைத்து மக்கள் பல் துலக்குவதைப் பார்க்கலாம். இதற்குக் காரணம் உண்டு. காலையில் எழுந்தவுடன் தொண்டை, வாய் பகுதிகளில் கபம் அதிமாகச் சேர்ந்திருக்கும். இந்தக் கபத்தை வெளியேற்றுவதற்கு கசப்பு, காரம், துவர்ப்புச் சுவைகள் உதவும்.

மாறாக நாகரிக மோகத்தால் பெரும்பாலானோர் இப்போது பயன்படுத்தும் இனிப்புச் சுவையுடைய டூத்பேஸ்கள் கபத்தைக் குறைக்காது.

நாட்டு மருந்துக் கடைகளில் ஆயுர்வேத மருந்துக் கடைகளில் மூலிகைக் குச்சிகள் கட்டுகளாக விற்கப்படுகின்றன. அவற்றை வாங்கி தாராளமாகப் பயன்படுத்தலாம். தினந்தோறும் பல் துலக்குவதற்குக் குச்சிகள் பயன்டுத்துவது கடினமாக இருந்தால் இந்தக் சுவையுள்ள பற்பொடிகளை பயன்படுத்துவது நல்லது. குச்சிகளை வைத்துப் பல் துலக்கும் போது ஈறுகளைப் பாதிக்காதவாறு கவனமாகத் துலக்க வேண்டும். பல் துலக்கிய பிறகு பத்து மில்லி அளவு நல்லெண்ணெய்யை வாயில் இட்டு சிறிது நேரம் கொப்பளிக்கலாம். கருங்காரி, கருவேலம் கஷாயத்தைப் பயன்படுத்துவதும் நல்லது. இவ்வாறு கொப்பளித்தால் வாயில் கசடுகள் நீங்கிவிடுவதால் வாய் துர்நாற்றம் அகலும், ஈறுகளில் சீழ் வடிதல் போன்றவை நீங்கும்.

**கண் மை**

கண்களுக்கு நாள்தோறும் மை (அஞ்சனம்) தீட்டுதல் அவசியம். இது கண்களுக்கு இதமளிக்கும் விஷயமாகும். மை இடுவதால் கண்களுக்கு அழகு கூடும். பண்டைய காலத்தில் எல்லாம் ஆண், பெண் வித்தியாசமின்றி கண்ணுக்கு மை இட்டுக்கொள்வார்கள். ஆயுர்வேதத்தில் இதை ''சௌவீராஞ்சனம்'' என அழைக்கின்றனர். மர மஞ்சள் சேர்த்து தயாரிக்கப்படும் கண்



மையை வாரத்துக்கு ஒருமுறை இட்டு கண் சுத்தி செய்வார்கள். இப்போது பெண்கள் மத்தியில் கூட கண் மை பழக்கம் அரிதாகவே காணப்படுகிறது.

மை இடுவதால் கண் இமைகள் உறுதியாகவும் அடர்த்தியாகவும் காணப்படும்.

கண்கள் மிக விரைவில் கபத்தின் சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்றன. இதனால் கண்களில் அதிகமாகக் கபம் சேருவதைக் தவிர்க்க வாரம் ஒருமுறை நாரிகோளாஞ்ஜனம் எனும் இளநீர்க் குழம்பு போன்ற அஞ்சனங்களைக் கண்களுக்குச் சொட்டு மருந்தாகப் பயன்படுத்த வேண்டும். இந்த அஞ்சனம்



(மிகுதி அடுத்த வாரம்)

**டாக்டர் கே.எல்.எம்.நக்பர்**
**மருத்துவப் பொறுப்பதிகாரி**
**அரசாங்க ஆயுர்வேத வைத்திய சாலை**
**நிந்தவூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைக்குமா கிழக்கில் ...

கிழக்கில் எழுந்துள்ள பல்வேறு பிரச்சனைகளை உரியமுறையில் அரசு தீர்க்க முன்வராதிருப்பதை விடுத்த உடனடியாக களத்தில் இறங்காது விட்டால் கிழக்கின் ஆட்சி தொடர்பாகத் தாம் வேறு வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் இறுதி எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

கடந்தவாரம் முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலர் ஹசன் அலி இவ்வாறு கருத்தறிவித்திருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் 2012ம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களை அடுத்து கிழக்கில் ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்த ஐ.ம.சு.கூ அவ்வாறு ஆட்சியமைப்பதற்காகப் பல்வேறு உடன்பாடுகளை எட்டியிருந்தது.

அவற்றுள் இரண்டரை ஆண்டுகளின் பின்னர் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரசிடம் கையளிப்பதாக உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. அதேபோல முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சனைகள், மீள்குடியேற்றம், மற்றும் திருகோணமலைக்குத் தமிழ்ப்பேசும் அரச அதிபர் ஒருவரை நியமிப்பது போன்ற விடயங்களைத் தற்போதுவரை ஐ.ம.சு.மு கவனிக்கத்தவறிவிட்டது என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வளவு விடயங்களையும் நிறைவேற்றத் தவறிவிட்ட ஐ.ம.சு.கூ 2015ல் முஸ்லிம் காங்கிரஸின் அங்கத்தவர் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை மட்டும் வழங்கும் என்று நம்பிக்கை வைப்பது எவ்வாறு என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

உடனடியாகவே ஐ.ம.சு.கூ சாதகமான சமிக்ஞைகளைக் காட்டாது விட்டால் கிழக்கின் ஏழு மாகாண சபை அங்கத்தவர்களும் எதிர்கட்சிக்குத் தமது ஆதரவை வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார்.

அண்மையில் கிழக்கு மாகாண சபையில் பெரும் களோபரங்களுக்குள் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கம் செய்வதற்கு கிழக்கு மாகாண சபை தமது ஆதரவைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அதன் போது கிழக்கின் மு.கா உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் இணைந்து தமது ஆதரவை இக் கோரிக்கைக்கு வழங்கியிருந்தனர்.

## கோணேசர் மலையில்...

துணிந்த போது அங்கிருந்த படையினரால் காப்பாற்றப்பட்டு கோணேசர் கோவிலில் கடமையில் இருந்த காவல்துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆரம்பக்கட்ட சிகிச்சைகளின் பின்னர் காவல்துறையின் கண்காணிப்பிற்குள் வைக்கப் பட்டுள்ளார்.

இருபத்தைந்து வயதான குமுதினி சம்பிக்கா என்ற இளம் பெண்ணே இவ்வாறு தற்கொலைக்கு முயன்றுள்ளார். தற்கொலைக்கான காரணத்தைத் தற்போது வரை வெளியிடாத அப்பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ள காவல்துறையினர் அவளது பெற்றோரைக் கண்டுபிடித்து அவர்களிடம் அவ்விளம் பெண்ணைக் கையளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

## கனேடியக் கப்பலின்...

சாட்டப்பட்ட ஆறு இலங்கை மற்றும் கனேடியர்களில் ஆசீர்வாதமும் ஒருவர். ஆனால் இக்குற்றச்சாட்டு சுமத்தப்பட முன்னனே அவரை இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது கனடா.

சண்சீ கப்பலை தாய்லாந்தில் கொள்வனவு செய்து அதனைக் கொண்டு பல நூற்றுக்கணக்கான புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிக் கொண்டு கடற்பயணத்தின் ஊடாக கனடாவைச் சென்றடைந்த குழுவில் ஆசீர்வாதமும் அவரது மனைவியும் உள்ளடங்கியிருந்தனர்.

நாடு கடத்தப்பட்ட பின்னர் அவர் தடுப்புக்காவலிடப்பட்டிருந்தார் என்றும் அக்காலத்தில் சித்திரவதைகளுக்கு உள்ளானார் என்றும் அவரது சட்டவாளர்கள் கனேடியப் பத்திரிகை யொன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கின் பிரச்சனை....

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கிழக்கில் காணப்படுகின்ற ஆசிரியர், காணி, விளையாட்டு, வளப் பங்கீடு ஆகிய பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து அமைச்சுக்களுக்கும் என உருவாக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்கள் சரியாகச் செயற்படுவதில்லை என்பதை அனைத்து பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டிருந்தனர். இங்கு கிழக்கு மாகாணக் காணி ஆணைக் குழுவொன்றை உருவாக்குவது தொடர்பாக அன்வர் அவர்களால் பிரேரணை முன்மொழியப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் முன்மொழிவுகள் ஆளுனரால் செயற்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுவதால் தற்போதைய முடிவுகளுக்கு என்ன நடக்கும் என வெளிக்காட்டவிரும்பாத சபை உறுப்பினர் மலைமுரசிற்குத் தெரியப்படுத்தினார்.

## வருமான ஆசையால்...

சருது சாந்தருவன் என்ற இளைஞன் தனது மீன்பிடிச் சகபாடியான ரத்தா என்பவருடன் திருக்கடலூர் கடற் படுக்கையிலிருந்து மீன்பிடிப்பதற்காக் கடலுக்குச் சென்றுள்ளார். மறுநாள் கதிரவெளிக் கடற்கரைப் பிரதேசத்தில் மதியம் 12.30 மணியளவில் ரத்தா கரைக்கு நீந்திச் சென்று அருகில் இருந்த காவல்துறையினருக்குத் தகவலொன்றைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி 06ம் திகதி மதியம் தொடக்கம் 07ம் திகதி காலை வரை மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இருவரும் தமக்குக் கிடைத்த மீனைத் திருகோணமலைக்கு எடுத்துச் சென்று விற்பதை விட வாழைச்சேனைக்குக் கொண்டு சென்று விற்றால் அதிக வருமானத்தை ஈட்ட முடியும் என எண்ணியதால் 07ம் திகதி காலையில் வாழைச்சேனை நோக்கிப் படகைச் செலுத்தியுள்ளனர். அங்கு கொண்டு சென்று மீனை விற்றுவிட்டு திரும்பி வரும் போது படகு கற்பாறைகளில் மோதுண்டதால் அப்படகில் இருந்த இருவரும் தண்ணீருக்குள் தூக்கி வீசப்படதாகவும் தான் கரையை நோக்கி நீந்தி வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து காவல்துறையினர் சாந்தருவனின் வீட்டிற்குத் தகவலை அனுப்பிவிட்டு அவரைத் தேடும் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

08ம் திகதி சாந்தருவனின் சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ரத்தா காவல்துறைத் தடுப்பில் இடப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் காணாமற்..

புகைப்படம் என்பவற்றுடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பதாக இல 27, தெற்கு எல்லைவீதி, மட்டக்களப்பு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாக ஒப்படைக்குமாறு இலங்கை தாயக மக்கள் மறுமலர்ச்சி கழகத்தின் நிறைவேற்றப் பணிப்பாளர் கலாநிதி லயனல் ஏ.செல்வேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிழக்குப்...

அவர்கள் வழங்குவதை படங்களில் காணலாம்.



## பிரபல கள்வன்...

இவருக்கு கண்ணி வெடியில் சிக்கியதால் கால் ஒன்று சத்திர சிகிச்சையின் ஊடாக அகற்றப் பட்டிருப்பது தெரிந்தது.

## கொழும்பில் கடத்தப்பட்டு...

கொள்ளப்பட்ட ஆட்கொணர்வு மனுவொன்றின் மீதான சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

2008ம் ஆண்டு தெகிவளை கடற்படைச் சோதனைச் சாவடியில் வைத்து கடத்தப்பட்ட ஐந்து மாணவர்களில் மூவரின் சார்பில் ஆட்கொணர்வு மனுவொன்ற தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அத் தாயார் மேலும் தெரிவிக்கையில் தனது மகனுக்கு லண்டனில் மருத்துவப் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்பு கிடைத்ததையொட்டி தனது நண்பர்களுக்கு விருந்தளித்துவிட்டு அந் நண்பர்களுடன் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது தெஹிவளையில் வைத்து அவர்கள் ஐவரும் கடத்தப்பட்டனர் எனத் தெரிவித்தார். தனது ஒரே மகனை இழந்த துயரத்தைத் தாங்கமுடியாத தனது கணவன் மனநிலைப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த அவர் காவல்துறையில் இக்கடத்தல் தொடர்பாக முறையிட்டு நாடு முழுவதும் தேடித்திரிந்த வேளையில் அதே மாதத்தில் ஒரு நாள் தனது மகன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் ஐவரையும் கடற்படை புலனாய்வாளர்களான சம்பத் முனசிங்க, ஹெட்டியாராச்சி உட்பட சிலர் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தடுத்து வைத்திருப்பதாக கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் எவ்வித தகவல்களையும் தாம் பெறவில்லை எனத் தெரிவித்த அத்தாயார், 2009ம் ஆண்டு மே மாதம் சஹாப்டீன் என்பவர் தன்னைத் தொடர்பு கொண்டு ஐவரையும் விடுவிப்பதற்கு ஒரு கோடி ரூபா கப்பப் பணம் கேட்டதாகவும் அதனைச் செலுத்த அப்போது முடியாது போய் விட்டதால் பிள்ளையை மீட்க முடியாது போய்விட்டதாகவும் மேலும் தெரிவித்தார்.

கடற்படைப் புலனாய்வாளர் சம்பத் முனசிங்கவிற்கும் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்ததாக முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட மேற்கொண்ட புகாரை அடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசேட அணியொன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சம்பத்தைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு கோட்டை நீதிமன்றில் அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் ஐந்து இளைஞர் கடத்தப்பட்டு காணாமற்போன தற்கும் சம்பத்திற்கும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு சம்பத்திற்கு எதிராகப் புகாரளித்த முன்னாள் கடற்படைத் தளபதி, மற்றும் அப்புகாரை விசாரித்த விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் ஆகியோரை அழைத்து விசாரிக்க வேண்டும் என வாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்போது ஜப்பானிய தூதராகக் கடமையாற்றும் முன்னாள் கடற்படைத் தளபதிக்கும், புலனாய்வுப் பொறுப்பாளர்களுக்கும் அழைப்பாணையை அனுப்புமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## ஆயுதம்...

எதிர்க்கட்சித் தலைவருமான அஸ்ஸெய்க் எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளரினால் முஸ்லிம்களின் கையிலும் ஆயுதம், அதற்கே மு.கா. வினர் ஆயத்தம்" எனும் தலைப்பில் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்புக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## புதையல்...

பரிபாலன விக்கிரகங்களைப் பெயர்த்து எடுத்த பின் அவற்றின் கீழ் புதைக்கப்பட்டிருந்த தகடுகளை அவர்கள் கைப்பற்றிச் சென்றிருப்பதாகத் தெரிகின்றது. புதையல் தோண்டிகள் [illegible]க்குச் சேதம் எதனையும் [illegible]வில்லை.

## அக்கரைப்பற்றில் ...

அக் கறுப்பின இளைஞனிடம் அடையாளம் காட்டத்தக்க எந்தவொரு ஆவணங்களும் காணப்படாமை யாலேயே காவல்துறை இந்த அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளது.

அட்டாளைச்சேனைக் காவல்துறை அலுவலகத்திற்கு இட்டுச் செல்லப்பட்ட அக் கறுப்பின இளைஞனிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அவர் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளதாகவும் எனினும் அதனை உறுதிப்படுத்தத் தக்கதான எவ்வித ஆவணங்களோ அல்லது நாட்டிற்குட் புகும் அனுமதியோ அவரிடம் இருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளைக் காவல்துறை மேற்கொண்டுள்ளது.

## முதலமைச்சரின்...

முதலமைச்சராக சி. வி. விக்கினேஸ்வரன் மஹிந்த ராஜபக்ச முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யத் தீர்மானித்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை அவர்களின் கை விரலில் பூசப்பட்ட மை காய்வதற்கு முன் தமிழ்க் கூட்டமைப்பு தூக்கி வீசி விட்டது என்றும் தமிழ் சட்டத்தரணிகள் பேரவை தெரிவித்திருக்கின்றது. இந்தச் செயற்பாடு மஹிந்த ராஜபக்ச' அரசுக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணை அழுத்தத்தைக் குறைத்து விடும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் காணாமற் போனோரது விபரங்களை 25ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து காணாமற் போனோரது விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு இலங்கைத் தாணக மக்கள் மறுமலர்ச்சிக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஏ.செல்வேந்திரன் அவர்கள் மக்களை நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் காணாமற் போனோரைக் கண்டறிவதற்காக அரசு நியமித்துள்ள ஆணைக்குழுவே தம்மிடம் இத்தகவல்களைக் கேட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் காணமால் போனவர்களை கண்டறிவதற்காக அரசாங்கம் நியமித்துள்ள ஆணைக்குழு, காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களை கோரியுள்ளது. தனியாகவோ அல்லது அமைப்பு ரீதியாகவோ காணாமல் போனோரின் விபரங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கிடையில் ஒப்படைக்குமாறு அந்த ஆணைக்குழு கோரியுள்ளது.

இதற்கமைவாக எமது இலங்கை தாயக மக்கள் மறுமலர்ச்சி கழகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோரின் விபரங்களை சேகரித்து அந்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோரின் முழுப்பெயர் மற்றும் முகவரி உட்பட காணாமல் போனோரின்

15



## ஆயுதம் ஏந்துவதைத் தடுப்பதற்கே முஸ்லிம் காங்கிரஸ் உருவானது...

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)

இந்த நாட்டின் முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதம் ஏந்துவதைத் தடுத்துக்கொள்வதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தாது தடுத்த பெருமை முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பையே சாரும் என்று மு.கா.வின் ஊடகப் பணிப்பாளரும் அக்கரைப்பற்று மாநகரசபையின்

15

## முதலமைச்சரின் பதவிப்பிரமாணம் - தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

வடமாகாண முதலமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில பதவிப் பிரமாணம் செய்து கொண்டதை தமிழ் சட்டத்தரணிகள் பேரவை கண்டித்துள்ளது என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு மாகாணசபையின் ஏனைய உறுப்பினர்கள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசின் அடக்குமுறைக்கு எதிராக, அந்த அடக்குமுறைக்குள் இருந்து கொண்டு, அரசின் சலுகை, அபிவிருத்தி மாயைகளுக்குள் சிக்கி விடாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம், தமது எதிர்ப்பை மக்கள் காட்டியுள்ளனர்.

இத்தருணத்தில் வட மாகாண

15

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மலைமுரசின் அறிமுகம்



மலைமுரசு வாராந்த பத்திரிகை அறிமுகத்தின் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கலை மாணவர்களுக்கும் சம்மாந்துறைவாசிகளுக்கும் இலவசமாக (2013.10.08 அன்று) பத்திரிகை வழங்கி வைக்கப்பட்டது.

பத்திரிகைகளை, மலைமுரசு பத்திரிக்கையின் சம்மாந்துறை பிராந்திய நிருபரும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவனுமான எம்.ரீ.எம்.பர்ஹான்

15



ஜனாதிபதி விருதான ஆசிரியர் பிரதீபா பிரபா விருதைப் பெற்றுக் கொண்ட திருமதி.ரி.முத்துக்குமார் அவர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.K.சிறிஸ்கந்தா அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

### அன்புவழிபுரம் கலைமகள் மகா வித்தியாலய ஆசிரியர் தின விழாவும் ஆசிரியர் கௌரவிப்பும்

உலக ஆசிரியர் தினத்தில் அன்புவழிபுரம் கலைமகள் மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தால் ஆசிரியர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப் பட்டனர்.



## தி-மெதடிஸ்ட் மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தின விழாவும் "பிரதீபாபிரபா" விருது கௌரவிப்பும் -10.10.2013



அதிதிகளின் வரவேற்பு

ஆசிரியர்களின் இசை -



2013 ம் ஆண்டின் ஆசிரியருக்கான "பிரதீபாபிரபா" சனாதிபதி விருதினை வென்ற ஆசிரியர் திருமதி. வாசுகி நற்குணம் அவர்களுடன் பிரதம அதிதியும் பாடசாலை அதிபரும்



## திருமலையில் நடந்தேறிய "தமிழ்த்தூது" தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாப் பதிவுகள்



விழாக்குழுத் தலைவர் அதி வணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலையுரையாற்றும் போது - நாட்டிய நாடக இயக்குனர் பரதரத்னா, பரதகலா வித்தகர் திருமதி கோ சரீஸ்குமார், உட்பட இசைக் கலைஞர் குழுவும், அரங்கேறிய மாணவிகளும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org